சிவமயம்

# அருள் ஒளி



மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் முகப்புத் தோற்றம்

சித்திரை புத்தாண்டு சிறப்பு மலர்

மலர் 21

சித்திரை மாத இதழ்

வெளியீடு:
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருச்சிற்றம்பலம்

ஓதவினையகலும் ஓங்கு புகழ் பெருகும்
காதற் பொருள் அனைத்தும் கைகூடும் - சீதப்
பணிக்கோட்டு மால்வரை மேல் பாரதப் போர் தீட்டும்
தனிக் கோட்டு வாரணத்தின் தாள்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்**

உதவி ஆசிரியர்:
**சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்**

2004 தாரண வருடம் சித்திரை மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் **21**




## மலரும் புத்தாண்டில் சமாதானம் கிடைக்க அனைவரும் பிரார்த்திப்போம்.



சித்திரைப் புதுவருடம் 13-04-2004 செவ்வாய்க்கிழமை பிறக்கின்றது. திருக்கணித பஞ்சாங்கப்படி மாலை 6-00 மணி 2 நிமிடத்துக்கும் வாக்கிய பஞ்சாங்கப்படி மாலை 4-00 மணி 8 நிமிடத்துக்கும் "தாரண" வருடம் பிறக்கப்போகும் நல்ல செய்தியைத் தருகின்றது. சூரியபகவான் சித்திரை மாதத்தில் மேட இராசியில் பிரவேசிக்கின்றான். இத்தினத்தில் சைவ மக்கள் அனைவரும் புதுவருடத்தைச் சிறப்பாக கொண்ட ாடுகின்றோம். இப்புண்ணிய நாளிலே ஆலயங்கள் தோறும் சென்று அங்கு நடைபெறும் மேடசங்கிராந்தி பூசை வழிபாடுகளில் பங்கு கொள்கின்றோம். சிறப்பான வழிபாடுகளினால் நாம் அனைவரும் புனிதம் பெறுகின்றோம். புத்தாண்டு தினத்தினை "சமாதானம்" என்கின்ற புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து புதுப்பொலிவு பெறத் திருவருளைப் பிரார்த்தனை செய்வோம். எல்லோரும் இன்புற்று இருக்கவும் எல்லா உயிரும் தன்னுயிர் போல நேசிக்கவும் வழிசமைக்க வேண்டும்.

கடந்த பல ஆண்டுகளாக நம் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் வடுக்களால் நம்மவர் சந்தித்த மனித இழப்புக்கள், சிந்திய இரத்தங்கள், பல்வேறுபட்ட இழப்புக்கள் யாவுமே எம்மைவிட்டு அகலாதவையே. இவற்றைச் சிந்திக்கும்போது மனிதாபிமானம், மனச்சாட்சி, மனித விழுமியங்கள் என்பன அருகி புறநடையாகி விட்டன. அணு ஆயுத உற்பத்தியின் பெறுபேறாக அமைதி, நிம்மதி, சாந்தி, சமாதானம், என்பன நாட்டில் பறிபோய்விட்டன. விஞ்ஞான நாட்டம் இன்று மெய்ஞான நாட்டம் பெறுகின்றது. இவற்றைக் கருத்தில் கொண்டே மேற்குலக நாடுகள் எல்லாம் இன்று ஆத்மீக நாட்டம் கொண்டு ஆத்மீகம் செறிந்து புத்துயிர் பெற்று வருகின்றது. இதனை அவதானிகள் அனைவரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில் ஆத்மீக நாடான ஈழநாட்டில் நாம் அனைவரும் பழிபாவங்களுக்கு அஞ்சி, மனிதப் பூண்டுகளை மதித்து மலர்ந்த முகத்துடன் அன்பு செலுத்தி மானிடநேயம் கொண்டு நல்லெண்ணம், நல்லுறவு, நல்லிணக்கம் கொண்டு வாழ திடசங்கற்பம் எடுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலரால் "சிவபூமி" என அழைக்கப்படும் எங்கள் ஈழத்திருநாட்டில் சுத்த சமரச சன்மார்க்க நெறி கொண்டு எம்மக்களுக்கு "சமாதானம்" பெற்றுத்தர அனைத்துத் தரப்பினரும் முயற்சி செய்யவேண்டும். முன்னரும் ஒரு சந்தர்ப்பத்தில் அருள்ஒளியில் வலியுறுத்தி இருந்தோம்.

தாயுமானவர் சுவாமிகள் பாடிய "பராபரக்கண்ணியில்"

"எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணியிரங்கவு நின்
றெய்வ வருட்கருணை செய்யாய்! பராபரமே!

என்று உயிர்களின் பெருமையை மிக அழகாகப் பாடி இருக்கின்றார். எனவே நாம் அனைவரும் உயிர்களின் பெருமையை நன்குணர்ந்து ஜீவகாருண்யம் காட்டி மனித சமுதாயத்தின் மேம்பாட்டுக்கு "சமாதானம்" பெற்றுத்தர மலரும் புத்தாண்டில் திடசங்கற்பம் கொள்வோம். எல்லாம் வல்ல இறைபரம் பொருளின் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

\- ஆசிரியர்

## சிவன்திருப் புகழினைப் பாடுமனமே



சிவன்திருப்புகழிசைத்தால்சிந்தைகுளிரும்அழகு
திருவா சகமணித்தேன் நித்தமொலிக்கும்
உவகையில் சிவன்பாத மலரினைநாடும் நல்ல
உள்ளமதில் கள்ளமில்லா பக்திமணக்கும்.

தில்லையில் அருள்நடனம் கண்டுவியக்கும் உள்ளம்
தொல்லையில் நீங்கிநலம் பெற்றுமகிழும்
கல்லும் கசிந்துருகும் காட்சியில் மேவும் அப்பர்
கல்தோணி யாகிவந்த கதையினைக்கூறும்.

பிட்டுக்கு மண்சுமந்த பெருமையும்பேசும் தன்னைப்
பித்தனென் றேயிகழ்ந்த சிறுமையும்கூறும்
எட்டுத்திக்கு அருளினொளிச் சுடரினை நாட்டும் எம்மை
வாட்டும்துயர் தீர்க்குமருந் தாகிவளரும்.

கங்கைபிறை தங்குசடை பங்கமறுக்கும் தினம்
கங்குல்பகல் ஆகிவந்தே சிந்தைநிறைக்கும்
மங்கையுமை பாகனருள் மண்ணிலுயிர்க்கும் எம்மை
மதிமயக்கும் ஆணவ்நல் இருளைவிரட்டும்

கண்டமதில் கொண்டநஞ்சும் கருணைசொரியும் சிவன்
கனல்விழியும் சீதம்மிகு காட்சியருளும்
வண்டுறங்கும் மலர்ப்பொழிலில் பூத்துமகிழும் நல்ல
வாசமலர் மாலைசிவன் கழுத்தில் இலங்கும்

கரியினுரிப் போர்வையவர் மேனியிலாடும் நல்ல
கன்னித்தமிழ் மறையுமவர் காதிலினிக்கும்
எரியுமவர் கரத்தொளிரும் எங்குறைதீர்க்கும் எந்தை
எங்கள்சிவன் புகழ்பாட துன்பங்கள்தீரும்.

பெருந்துறையில் குருவான பெருமையும் பேசும் என்றும்
பேதமில்லா சிவஞான போதமும்காட்டும்
கருணைவிழி மலர்திறந்து எங்களைக்காக்கும் கறை
கண்டனுமை நாதன்புகழ் பாடுமனமே.

கவியாக்கம்: சு. குகதேவன், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரண புதுவருடப்பிறப்பு வாழ்த்து

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்கள்**

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்பது எமது தினாந்தரப் பிரார்த்தனை. "வையகம் எல்லாம் துயர் தீர்கவே" என்பது நாம் படிக்கும் திருமுறை. "பெருகலாம் தவம். பேதமை தீரலாம் திருகலாகிய சிந்தை திருத்தலாம்" என்பது அப்பர் பெருமான் வாக்கு. இன்றைய தினத்தில் எமதுள்ளத்தில் இருத்த வேண்டிய வாசகங்கள் இவை. எங்கும் சிவமயம், எல்லாம் சிவமயம், எதிலும் சிவமயம் என்று எண்ணியெண்ணி இறும்பூது எய்த வேண்டுமானால் ஒவ்வொரு அடியும் திருவருளை நோக்கி வைக்க வேண்டும் என்பதற்குப் பயின்று கொள்ள வேண்டும். காலத்தை அளந்து அளந்து வாழுகிறோம். அளவுக்கும் எமக்கும் சம்பந்தமில்லை என்றாலும் அது தானாகவே இயற்கை நியதிப்படி அமைந்து எம்மை விழிப்படையச் செய்கிறது. கடந்த ஆண்டு நாம் ஆற்றிய தரமான பாதைக்கு வழிநடத்தத் தூண்டுகிறது. ஒழுக்கமும், தெய்வ நம்பிக்கையும் இணைந்து இடைவிடாது முயற்சி செய்து வாழ்வை வளமாக்க உறுதிபூண வேண்டும். தெய்வ நம்பிக்கையுடையவர்களே நியாயத்துக்குக் கட்டுப்படுவார்கள். பிறர் துன்பங்கண்டு வருந்துவதோடு அதனைப் போக்கி விடவும் முன்வருவார்கள். நமது சமயப்பெரியோர்கள் ஆத்மீகத்துறையில் எவ்வளவு உயர்ந்து நின்றார்களோ அதே அளவு மக்கள் தொண்டும் செய்திருக்கிறார்கள். இதனால் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரரானார்கள். இந்த நிலை கைவருமானால் மற்றவர்களால் ஏற்படும் துன்பங்கள் எம்மை நலிவடையச் செய்யமாட்டா. கோளறு பதிகம் இதனை அழகாகக் காட்டுகிறது.

"கோளரி யுழுவையோடு கொலையானை கேளல்
கொடுநோய்க ளான பலவும்
ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே"

என்பது ஞானவாக்கு. இவை எமது இல்லங்கள் தோறும் இடம்பெற வேண்டும். புதுவருடப்பிறப்பு என்றால் இறைவழிபாட்டுடன் பொங்கல் செய்து தாமுண்டு பிறருக்கு வழங்கலும் பெரியவர்கள் கையினால் கைவிஷேசப் பணம் பெற்று மகிழ்வதும் விருந்து கொடுத்தலும் சுபநேரம் பார்த்துப் புதுக்கருமங்களை ஆரம்பிப்பதும் ஆலய வழிபாட்டைத் தவறாது செய்தலும் எமது பண்டுதொட்ட மரபாகும். இவற்றை வெறுஞ் சடங்காக மட்டும் மேற்கொள்ளாமல் உள்ளத்திலும் புதுமையுணர்வு ஓங்கி "நானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்பேன்" என்ற ஒரு திடசங்கற்பத்தை எடுத்துக் கொள்வது மேலானது. சிந்தனையிலும் செயலிலும் புதுமை காணவேண்டும்.

"அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி அரும்பசி எவர்க்கு மாற்றி, மனத்துளே பேதா பேதம் பொய்வஞ்சகம், களவு சூது சினத்தையும் தவிர்ப்பாராகில் செய்தவம் வேறொன்றுண்டோ" என்றார் ஒரு பெரியார். சமய வாழ்வு என்பது தனக்குத்தானே நற்சான்று பகர்வதிலே தான் வெற்றி காண்கின்றது. கல்வி என்பதும் நீதி, சத்தியம், அறம் என்பவற்றின் சார்பிலே வளரவேண்டும். இன்று கற்றவர்கள் மத்தியிலே பல ஊழல்களைக் காணுகிறோம். கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என்று சொல்ல நேரிடுகிறது. ஆகவே புத்தாண்டை முன்னிட்டு எமது பணிகளை நல்லபடி வகுத்து தெய்வத்தை முன்வைத்து திருவருளைத் துணைகொண்டு அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் அகத்திலே அன்புங் கொண்டு வாழ வழிகாண்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்காதேவி தேவஸ்தான
## வருடாந்தப் பங்குனிப் பொங்கல் விழா

(பங்குனி மாதக் கடைசிச் செவ்வாய்)

ஆண்டு தோறும் பங்குனி மாதத்துக் கடைசிச் செவ்வாய் தினத்தில் வருடாந்தப் பொங்கல் விழாவை நடாத்துவது வழக்கமாகும். யாழ். குடாநாட்டின் நான்கு திசைகளிலிருந்தும் அரிசியும் பொங்கல் பானையும் கொண்டு அதிகாலை ஐந்து மணிக்கே அடியார்கள் இங்கு வந்து விடுவார்கள். முதல் வழுந்து கட்டியவுடன் அடியவர்கள் தங்கள் தங்கள் பொங்கலை ஆரம்பிப்பார்கள். மாலை நான்கு மணிவரை இந்நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறும். இராஜகோபுரத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட பந்தலில் படையல் நேர்த்திகள் இடம்பெறும்.

இவ்விழா கடந்த முந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையுடையது. ஆலயத்தின் முன்னைநாள் அறங்காவலர்கள் இவ்விழாவுக்கான செலவுகளுக்கு வடகிழக்கே அமைந்த நிலத்தின் வருமானத்தைப் பயன்படுத்த உறுதி எழுதி வைத்துள்ளனர். அற்புதம் நிறைந்த அம்பாளின் பொங்கல் விழாவில் அனைவரும் பொங்கிப் படைத்தும் பொங்கலை ஏழைகளுக்கு வழங்கியும் பெருமிதம் அடைகின்றனர். எனவே பொங்கலை முன்னிட்டு எமது வாழ்நாளில் அச்சமும் பிணியும் அகலவேண்டும் என்று அருள்மிகு துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

## திருநாவுக்கரசு நாயனார்

சமய குரவர்களில் திருநாவுக்கரசு நாயனாரும் ஒருவர் ஆவர். இவர் திருஞான சம்பந்தப்பெருமானது காலத்தைச் சேர்ந்தவர். திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகவாகப் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார் எனப்படும். இளமைக் காலத்திலேயே பல துன்பங்களை அனுபவித்தவர். சமண சமயத்திற் சேர்ந்து தருமசேனர் என்ற பட்டப்பெயரைப் பெற்றார். சூலை நோய் ஏற்பட்டபோது தமக்கையாரான திலகவதியாரிடம் சென்று சைவத்திற்கு மாறிப் பணிபுரிந்தார். இவர் பாடிய திருமுறைகள் 4ஆம், 5ஆம், 6ஆம் திருமுறைகளாக வகுக்கப்பட்டன. இவரது தொண்டு சரியைத் தொண்டு எனப்படும். பல்லவ மன்னன் மகேந்திரவர்மனைச் சைவத்திற்கு மாறச்செய்த பெருமைக்குரியவர் எந்நேரமும் உழவாரத்துடன் சென்று கோயிலைச் சுத்தம் செய்வார். எண்பத்தொரு வயதுவரை இவ்வுலகில் வாழ்ந்து சைவத்திற்கு பணியாற்றியவர். சமணர்கள் இவருக்கு பல துன்பங்கள் செய்தனர். சுண்ணாம்பு அறையில் இட்டனர். நஞ்சு கலந்து பாற்சோறு உண்ணக் கொடுத்தனர். யானையை ஏவினர் கல்லுடன் கட்டி கடலில் இட்டனர். ஆனால் இவருக்கு ஒன்றுமே பலிக்கவில்லை ஆளுடைய அரசு நாவுக்கரசு அப்பர் என்பன இவருடைய மறு பெயர்கள் எனப்படும். சித்திரை மாத சதய நட்சத்திரத்தில் இறைவனுடன் முத்தியடைந்தார்.

**ச. உதயவாணி**

துர்க்காபுரம் மகளிர் இல்லம், ஆண்டு - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயப் பண்பாட்டுக்கு திருக்கோவில்கள்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சைவ சமயப் பண்பாட்டின் சிகரமாகத் திருக்கோயில்கள் விளங்குகின்றன. கோயில் என்றால் இறைவன் உறையும் இல்லம் என்பது பொருள். திருக்கோயில்கள் ஊர்கள் தோறும் இருக்க வேண்டியதன் அவசியத்தை நம் முன்னோர்கள் மிகத் தொன்மையான காலத்திலேயே வலியுறுத்தியுள்ளார்கள். திருக்கோயில் இல்லாத ஊர், திருவற்ற, அழகற்ற, பொலிவு அற்ற ஊர் என்றும்; அத்தகைய ஊர், ஊர் அல்ல அடவி காடு என்றும் அப்பரடிகள் தேவாரப்பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் ஔவைப் பிராட்டியாரின் அருள்வாக்கு, சைவ மரபாகிவிட்டது. ஓர் ஊருக்கு இறைவன் ஆலயமும், வித்தியாலயமும் மிக இன்றியமையாதன.

இறைவனின் ஆலயம் ஆன்மிகத்தை விளங்க வைக்கிறது. வித்தியாலயம் அறிவொளியை மிளிர வைக்கிறது. இவை இரண்டும் இல்லாத ஊரில் ஆன்மிகப் பண்பாட்டு வறுமையும், அறியாமை இருளும் நிறைந்திருக்கும். மக்களின் துன்பங்கள் துயர்களுக்குக் காரணங்களாக பண்பாட்டு ஒழுக்கக் குறைவும் அறியாமையுமே இருந்து வருகின்றன. ஆன்மிகப் பண்பாட்டின் ஊற்றுக்கண்ணாக இறைவன் ஆலயமும், அறிவின் ஊற்றிடமாக வித்தியாலயமும் விளங்குகின்றமையால் அவற்றைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் நம் எல்லோருக்கும் உண்டு.

அண்டங்கள் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து எங்கணும் வியாபித்து நிற்கும் பரம்பொருளுக்கு நான்கு பக்கங்களிலும் எல்லை வகுத்து சுவர்களை அமைத்து ஒரு சிறிய நிலப்பரப்பிற்குள் கோயில் ஸ்தாபிக்கப்பெற்று அதையே இறைவனின் இல்லமாகக் கொள்ளுதல் எவ்வாறு பொருந்தும் என வினா எழுப்புபவர்களும் இல்லாமலில்லை. அவர்களுக்குத் தக்க பதில் அளிக்கவேண்டியது அறிவுள்ளவர்களின் கடமையாகும்.

மனம், வாக்கு, காயத்திற்கு எட்டாததும்; குணங்குறி அற்றதும், எங்கும் வியாபித்தும் இருப்பது கடவுள். அவ்வாறிருந்தும் கடவுள், ஆனவர் எவர் கண்ணுக்கும் காணப்படும் பொருள் அன்று. அதுவே கடவுளின் இயல்பும் ஆகும். எனவே கடவுளின் சுயநிலை அருவம் எனப்படுகிறது.

கடவுள் அருவமாகவே இருந்து விட்டால். மனிதர்கள் ஆகிய நாம் எப்படி அவரை நினைப்பது, எவ்வாறு அவருடன் பேசுவது? என்ற ஆதங்கம் எழுந்து விடும். இறைவனுடன் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்கிறார்கள் அருளாளர்கள். அப்படியென்றால் அத்தகைய நாட்கள் பயனற்ற நாட்களாகி வீணாகக் கழிந்து விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மனிதர்களுக்கு வாழ்வதற்கெனக் கிடைக்கும் நாட்களே மிகச்சொற்பம். அந்த நாட்களையும் பயனற்றதாக ஆக்கி விட்டால், மனிதப்பிறவி எடுத்ததனால் என்ன புண்ணியம். இந்த மனிதப் பிறவி எமக்குக் கிடைத்தது, கடவுளுடன் பேசுவதற்காக, கடவுள் புகழ் பாடுவதற்காக, அவனுடன் உறவு கொள்வதற்காக, அவனை வணங்கி வழிபடுதலுக்காக என்பதை நாம் கணப்பொழுதேனும் மறந்து விடலாகாது. மறந்தால் வாழ்நாள் வீணாகிவிடும்.

அருவமாக உள்ள கடவுளைத் தியானிக்க, அவருடன் உறவு கொள்ள ஞானிகளுக்குத்தான் இயலும். நம்மில் மிகப் பெரும்பான்மையினர் ஞானிகள் அல்லர். அந்தப் பரிபக்குவநிலையை அடையாதவர்கள். நாம் சாதாரண மக்கள் தான். அந்த வகையில் நாம் கடவுளுடன் பேசுதல் செய்ய வேண்டுமாயினுஞ்சரி; ஏன், அவனை நினைப்பதற்கும் தியானிப்பதற்கும் கூட, சிற்றறிவுடைய நமக்கு எம் முன்னால் ஒன்றை உருவமாக முன்னிலைப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

ஆரம்பக் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு மலையைப் பற்றிப் படிப்பிப்பதாக இருந்தால், ஒன்றில் மலையை நேரடியாகக் காண்பிக்க வேண்டும் அல்லது மலையைப் போன்ற மாதிரி உரு ஒன்றைக் காண்பிக்க வேண்டும். நேரடி அனுபவமின்றிப் பிள்ளைகள் ஒன்றை விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அவ்வாறுதான் சாதாரண மக்களாகிய எமக்கும் கடவுளை அருவமாகத் தியானிப்பதோ, அருவத்துடன் பேசுவதோ சிரமம். உருவம் வேண்டும். உருவம் இல்லா விட்டால் சாயலையாதல் முன்னிலைப்படுத்தியாக வேண்டும். இந்த உதவியை நமக்குச் செய்யவே சிவாகமங்கள் தோன்றின. சிவாகம முறைப்படி திருக்கோயில்கள் அமைக்கப்பட்டன. தெய்வ விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. கும்பாபிஷேகம் மூலம் தெய்வ சாந்நித்தியம் தருவிக்கப்பட்டன. நித்திய நைமித்திக கிரியைகளினால் தெய்வ சாந்நித்தியம் தினம் தினம் உறுதியாகி வருகின்றது. கோயில் வழிபாடு நமக்கு எத்துணை அவசியம் என்பதை உணர்ந்து கொள்வோம்.


**சிவபூமி கண்தான சபை**

தானங்களில் சிறந்த தானமான கண்தானத்தைச் செய்ய முன்வாருங்கள் உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்துக்கு ஒப்புதல் தாருங்கள்




தொடர்புகளுக்கு:

கண்வைத்திய நிபுணர்கள்

**ஆறு. திருமுருகன்**

தொலைபேசி

**021-222 6550**

Dr. ச. குகதாசன், **021-222 3645**

Dr. சிவந்தா, **021-222 3149**

யாழ். போதனா வைத்தியசாலை

# நம்பிக்கை எனும் நன்மருந்து

**DR. தி. திவாகரன் அவர்கள்**
(உளமருத்துவத்துறை யாழ்ப்பாணம்.)

"நம்பினோர் கெடுவதில்லை – இது
நான்கு மறைத் தீர்ப்பு"

இவ்வுலகம் இயங்குவதும், அதன் கண் உயிர்கள் வாழ்வதும் இந்நம்பிக்கையின் துணைக்கொண்டே; இவற்றுள் தலையாயது ஆதியந்தமற்ற பரம்பொருளான இறைவனிடம் வைப்பது. ஆண்டவனே இல்லையென்று அறையும் நாத்திகர்கள் கூட அதே பரம்பொருளிடமே நம்பிக்கை வைக்கின்றார்கள். அதற்கு "இயற்கை நியதி" என்று பெயர்கூறி அழைக்கின்றார்கள்; எவ்வாறாயினும் அது 'தன்னம்பிக்கை' எனும் பெரும் சக்தியாகி விந்தைகளைச் செய்கின்றது. குறிப்பாக, மருத்துவத் துறையில் இந் நம்பிக்கை மகத்தான இடம் பெறுகின்றது.

ஒவ்வொரு வியாதிக்கும் மருந்துகள் விரைந்து கண்டறியப்பட்டுக் கொண்டிருக்கும், இவ்விருபத்தோராம் நூற்றாண்டிலும், எப்பிணிக்கும் பெருமருந்தாயும், அருமருந்தாயும் விளங்குவது நம்பிக்கையே என எவ்வைத்தியரும் ஒப்புவர்!

அறிவியல் அகராதியில் இம்மருந்துக்குப் "Placebo" என்று பெயர்!!

'பெரும்பாலான நோய்களுக்கு எம்மருந்தும் சம்மதம்.' அதாவது, நோயையோ, நோய் முதலையோ நாடாமலேயே வைத்தியர் எதனைக் கொடுத்தாலும் (ஏன் வெறும் நீரைக் கொடுத்தாலும்) 'அவர் நல்ல மருந்து தருகின்றார்; அது என்னைக் குணமாக்கும்' என்ற நோயாளியின் நம்பிக்கையால் மட்டுமே பல வியாதிகள் குணமாகிவிடும்" இதனையே Placebo (நம்பிக்கையின் விளைவு) என்கிறார்கள்.

மருந்தியல் ஆய்வாளர்கள் தம்து தயாரிப்புக்களை இப் Placebo உடனேயே ஒப்பிட்டுப்பார்ப்பவர். இதன் அடிப்படையிலேயே ஔடதங்கள் மருத்துவ உலகத்தால் அங்கீகரிக்கப்படுகின்றன. சிறு உதாரணமொன்றால் இதனை விளங்க முயல்வோம்;

ஒரு குறிப்பிட்ட கிருமித்தொற்று நோய்க்கு உள்ளாகிய 100 மனிதர்களுக்கு எம்மருந்தைக் கொடுத்தாலும் அவர்களில் 50 பேர் Placebo effect (நம்பிக்கையின் விளைவு) ஆல் குணமடைவார்கள் என வைத்துக் கொள்வோம். ஆனால் குறிப்பிட்ட ஒரு "X" மருந்தை உட்கொண்டால் 90 பேர் குணமடைந்தால், அது அந்நோய்க்குரிய நல்ல மருந்தாக ஏற்கப்படும். (ஒரு வேளை 55-60 பேர் மட்டுமே குணமாகின் வீரியம் போதாதென்று நிராகரிக்கப்டும்) பின் இந்த X நல்ல மருந்து என விளம்பரப்படுத்தப்படும். ஆனால், இங்கு 90 பேரில் முற்கூறிய 50 பேரும் அடக்கம்.

அப்படியானால் உண்மையில் X ஆல், 90 பேர் குணமடைந்தனரா, 40 பேர் குணமடைந்தனரா? நல்ல மருந்தான X, "Placebo effect" (நம்பிக்கையின் விளைவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் நோயைக் குணமாக்குவது சாத்தியமா? இரண்டும் சேர்ந்தலிலா இயங்கியுள்ளன? ஆயின் மிக அத்தியாவசியமானது எது?

இவை பரிசோதனை முறைகளால் விடைகாண இயலாத வினாக்கள்! நம்பிக்கையின் விளைவை இல்லாதொழித்து ஆய்வு நடத்த முடியாது.

**நம்பிக்கை இல்லா இடம் ஏது**
**ஆண்டவன் இல்லா இடம் ஏது**
**அவன் இன்றி அணுவும் அசையாது.**

ஆமாம், எல்லா வைத்தியரும் பெரும்பாலும் ஒரே மருந்தைக் கொடுப்பினும் கூட, சிலர் திறமையான கைராசிக்காரராகுவதற்கு, மக்கள் அவர்கள் பால் வைக்கும் "இந்நம்பிக்கையின் விளைவே" காரணம். இது எங்ஙனம் சாத்தியம். விஞ்ஞானம் இதனைப் பூரணமாக விளக்கவில்லை. ஆயின், மூளையால் சுரக்கப்படும் பல இரசாயனப் பதார்த்தங்கள் இவ்விந்தையைப் புரிவதாக நம்பப்படுகின்றது. இவை நோய் எதிர்ப்புச் சக்தியையும், பிற உடற்றொழிற்பாடுகளையும் மேம்படுத்துவதாகவும் விளக்கப்படுகின்றது. குறிப்பாக வலிகளைப் போக்குவதில் இப்பதார்த்தங்கள் முக்கிய பங்கு வகிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. சாதாரண ஊசி குத்துவதைத் தாங்கமுடியாத பலர் பக்திப் பரவசத்துடன் பறவைக்காவடி எடுத்தலையும், தீமிதித்தலையும் காண்கின்றோமல்லவா?

நிற்க ஆங்கில அகராதியில் "Placebo" என்ற சொல்லின் மூலம் பற்றிய குறிப்பில் அதன் கருத்து

"I SHALL PLEASE THE LORD" - அதாவது "நான் இறைவனை மகிழ்ச்சிப்படுத்துவேன்."

என்பதாகக் காணப்படுகிறது. ஆகவே இறையருளே எல்லா மருந்துகளிலும் மறைபொருளாக, ஆழ்பொருளாக அமைகின்றது எனக் கொள்ளலாம். "வைத்தியநாதன்" என்னும் பெயர், நோயிலும் பிணியுந் தொழி"லரான கடவுளுக்குச் செவ்வனே பொருந்துவதன்றோ!

**"பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்**
**பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்"** என்கிறார் திருமூலர்.

விஞ்ஞானத்தால் விளக்க முடியாத பேரருள், நம்பிக்கையுள் மறைந்து உறைகின்றது.

மனோதத்துவத் துறையில் இந்நம்பிக்கை மேலும் சிறப்பான இடம்பெறுகின்றது. எமது மனத்தின் மிகப்பெரும் (9/10) பகுதி நனவு நிலையில் அறியப்படாத ஆழ்மனத்துக்கு (நனவிலி மனம்) உரியது. இப்பகுதிக்குள் நம்பிக்கை புகுந்து பற்பல அற்புதங்களைச் செய்யக்கூடியது; மனநோய்கள் ஏற்படாதிருக்கவும், அவற்றைக் குணமாக்கவும் மிகப் பயன் தருவது. இவ்வகையில் ஆழ்மனத்தைக் கட்டுப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Hypnosts" எனும் முறையால் பல நோய்கள் குணமாகும் என்றும் பலர் நம்புகின்றார்கள். இது ஒருவகை மனோவசிய வைத்தியமுறை. ஆனால் "வசியம்" என்ற பெயர் இதற்குப் பொருத்தமானதன்று. இது ஒருவகையில் தியானத்தை ஒத்தது. மனிதனின் ஆழ்மனச் சக்தியை அண்மிக்கும் இம்முறைக்கு மூலாதாரமானது நம்பிக்கையே.

நிற்க. இங்கெல்லாம் நம்பிக்கைதான் பிரதானமானதே தவிர, எதன் மீது நம்பிக்கை வைக்கின்றோம் என்பது அல்ல என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்வகையில் எமது சமயச் சடங்குகளையும், புராணக் கதைகளையும் தம்மை மிக்க அறிவாளிகள் எனக் கூறிக் கொள்வோர் "மூடநம்பிக்கைகள்" எனக் கேலி செய்வது நினைவு வருகிறது. இவ்வாறு "மூடநம்பிக்கைகள்" எனக் கருதப்பட்ட பல நம்பிக்கைகள் மனித குலத்துக்கு ஆற்றிய பணியும், அளித்த மனச்சாந்தியும், அவை அற்ற வெறும் அறிவால் பெற முடியாததாகலாம்.

ஆலயம் தொழுவதும், ஆண்டவனைப் பாடுவதும் ஆன்றோரைப் பணிவதும் இதய சுத்தியுடன் செய்யப்படும்போது மனோவசியத்திலும் மகத்தானதாகிறது. ஆழ்மனத் தியானம், யோகாசனம் என்பன தன்னம்பிக்கையின் ஊற்று. எமது கோயிற் கிரியைகள், சடங்குகள், ஊர் வழக்கங்கள், வீட்டுக்கிருத்தியங்கள் யாவும் பற்பல சமூக, உள, உடல், உணர்வுத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. இவை பற்றி விவரிக்க இக்கட்டுரை போதாது.

ஆனால், இவை எதிலுமே நம்பிக்கையற்ற வெற்றிட மனம் மிக ஆபத்தானது. தனக்கும், தன்னைச் சார்ந்தாருக்கும் தீங்கானது அறிவியல் பெருக, நம்பிக்கைகள் மாறலாம். ஆனால், அவை வேறு வடிவங்களில் தொடரும், தொடர வேண்டும். மாற்றங்களை எதிர்பார்த்துத்தான்,

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்"

என்று சாந்தி பெற்றனர் எம் ஆன்றோர்.

எனினும், "மூடநம்பிக்கைகள்" கிடையாதே தவிர "போலி நம்பிக்கைகள்" உண்டு. பிறருக்குத் தீமை பயக்கும் எண்ணங்களும் தீயவற்றின் மீது வைக்கும் நம்பிக்கைகளும் மிகுந்த தன்னலம் நிறைந்தனவும் போன்ற பலவற்றைப் "போலி நம்பிக்கைகள்" எனலாம்.

உளமருத்துவத்தில் ஒருவரது கல்வி கேள்விகளுக்கும், சமூக கலாச்சார விழுமியங்களுக்கும், இருப்பிட நம்பிக்கைகளுக்கும் புறம்பானவற்றைப் (ஒவ்வாதன) போலி நம்பிக்கைகள் (Delusion) என்று வரையறுக்கின்றோம்.

குறிப்பாகப் பிறருக்குத் தீங்கிழைக்கக் கொள்ளப்படும் நம்பிக்கைகள், அவை நியாயமான காரணங்களுக்காக இருப்பினும் தனக்கே தீமையளிக்கும். பிட்டுக்கு மண்சுமந்த சிவனை அடிக்க எண்ணி மன்னன் பிரம்படி பெற்றதுபோல், தீய எண்ணங்களும் நம்பிக்கைகளும் ஆத்மாவுக்குத் வளைவளிக்கும். இதற்கும் மனோதத்துவ விளக்கங்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தன்னைத் தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்" என்றார் வள்ளுவர்.

மேலும், குறுகிய சுய இலாபங்களுக்காக வைக்கப்படும் நம்பிக்கைகள் நீண்டகாலம் பயன் தரமாட்டா. சில மதமாற்றங்கள் இவ்வகைக்குரியனவாகும். தற்காலிகத் தேறுதல்களுக்காக சிதைக்கப்படும் நம்பிக்கைகள் பிற்காலத்தில் குற்றவுணர்வைத் தோற்றுவிக்கும். சேய் அன்பைத் தேடவேண்டும்; பிறிதொரு தாயைத் தேடுதல் பெரும்பாலும் பொருத்தமற்றது மாற்றங்கள் ஏற்படும்போது; அவை முரண்பாடில்லாத மன அமைதியை அளிக்க வேண்டும்.

இவ்வாறு அமைதி பெற்ற அப்பர் சுவாமிகள் ஆண்டவன் மீதான தன் நம்பிக்கையை ஆழமாக வெளிப்படுத்திய "மறுமாற்றத் திருத்தாண்டகம்" இக்கட்டுரைக்கு இனியதோர் நிறைவாகும்.

திருச்சிற்றம்பலம்

**"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்**
**நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ**
**மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லை**
**தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான**
**சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமேற்கே நாமென்றும் மீளா வாளாய்க்**
**கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே"**

திருச்சிற்றம்பலம்

# சிவம்

### சிவலிங்கத்தின் பொருள்

சிவம் + லிங்கம் = சிவலிங்கம்
சிவம் = கடவுள், லிங்கம் = அடையாளம்
லிம் = லயம்; ஒடுங்குதல்
கம் = போதல்; தோன்றுதல்
ஆன்மாக்களும், உலகங்களும் ஒடுங்குவதற்கும், தோன்றுவதற்குமான மூலஇடம் என்பது பொருள்.



### நடராஜர் கையில் உடுக்கு இருப்பதேன்?

உடுக்கிலிருந்து வரும் ஒலியால் அண்ட பிண்ட சராசரங்கள் எல்லாம் பெரிய தீயிலிருந்து பொறிகளும் ஊற்று நீரிலிருந்து குமிழிகளும் வருவன போன்று, இறைவனிடமிருந்து தோன்றுகின்றன என்பதைக் குறிக்கும். ஆகவே, இது சிருஷ்டி அல்லது ஆக்கத்தை உணர்த்துகின்றது. 'உலகம் சப்தத்தில் பிறந்து, அதிலேயே நிலைபெற்றிருக்கின்றது' என வேதம் கூறுகின்றது.

### மகேசன் வாகனம் நந்தியாயிருப்பதேன்?

நந்தி தர்மசொரூபம். இது சமம், விசாரம், சந்தோஷம், சாது சங்கமாகிய நான்கு குணங்களையும் நான்கு கால்களாகக் கொண்டிருக்கிறது. நந்தியின் மீது பரமேஸ்வரன் ஆரோகணிப்பது, இந் நான்குவகை ஆத்ம குணங்களையும் கொண்ட உயிர்களிடத்து மாத்திரமே இறைவன் எழுந்தருளி வீற்றிருந்து அருள் செய்வான் என்னும் தத்துவத்தை விளக்குவதாகும்.

**நன்றி: இந்துமத விளக்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைகளின் பெருமை

திரு. ஆ. கதிரமலைநாதன் அவர்கள்

"யாவர்க்குமாம்! இறைவற்கொரு பச்சிலை"

திருமந்திரம் சொன்ன திருமூல நாயனாரின் தெய்வீக வாக்குகளில் ஒன்றே இது; யாவர்க்கும் என விழித்து செய்யத்தக்க நான்கு நற் செயல்களை வற்புறுத்தும் பாடலின் முதல் அடியாக வருவது. இறைவனுக்குச் சமர்ப்பிக்க மலர் தான் வேண்டும் என்பது அவசியமேயல்ல; பக்தி சிரத்தையுடன் அர்ப்பணிக்கப்படும் பச்சிலை ஒன்றே அவனுக்குப் போதும் என்பதாம்.

சில குறிப்பிட்ட உற்சவ நாட்களின் போது இறைவனுக்குச் சாத்த, அலங்கரிக்க, அர்ச்சிக்க மலர்களிலும் பார்க்க குறித்த ஒருசில பச்சிலைகளே பிரதான இடத்தைப் பெற்றுக் கொள்ளுவதனை அவதானித்திருக்கலாம்.

- சதுர்த்தியின் போது அறுகம்புல்
- சிவராத்திரியின் போது வில்வமிலை
- நவராத்திரியின் போது வேப்பமிலை
- சண்முகார்ச்சினையின் போது கடம்பமிலை
- கிருஷ்ண ஜயந்தியின் போது துளசியிலை
- புரட்டாதிச் சனியின் போது வன்னியிலை

இதனை விட வருடாந்த மகோற்சவங்களில் பிரதான அங்கமாக வரும் தேர்த்திருவிழா அன்று எழுந்தருளித் திருவுருவங்கள் தேரிலிருந்து இறக்கப்பட்டுக் கொண்டு வரும்போது, பச்சை சாத்தப்பட்டு - பச்சை மயமாகவே காட்சி தருவதனைத் தரிசிப்பதே கண்கள் செய்த பாக்கியம் என்பர் பக்த கோடிகள்.

- பச்சை நிறப் பட்டாடை அணியப்படும்
- பச்சை நிறக்குடை பிடிக்கப்படும்
- பசுமையான (அவரவர்க்குரிய) பச்சிலைகளிலான மாலை அணியப்படும்.
- பசுமையான புதிய பச்சிலைகளினால் திருவுருவங்களின் பின்னணியும் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

இவை யாவற்றையும் விடப் பச்சிலைகளுக்குக் இன்னொரு சிறப்பும் அர்ச்சனையின் போது தரப்படுகின்றது. அதாவது மலரினைக் கிள்ளி எடுத்தோ, இதழ் இதழாகப் பிரித்தோ அர்ச்சிக்கக் கூடாதெனவும் இவ்வாறின்றிப் பச்சிலையைக் கிள்ளி எடுத்து அர்ச்சிக்கலாம் எனச் சொல்லப்படுவதும் குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்றாகும். இவ்வாறாகப் பச்சிலைகளின் பெருமை பேசப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்த்தங்கள் ஆயிரத்துள் இவை பத்தும்

முருகவே பரமநாதன் அவர்கள்

மன்னும் இமயமலை யெங்கள் மலையே
மாநில மீதிது போற்பிறி தில்லையே!
இன்னறுநீர்க் கங்கையா றெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?

மகாகவி பாரதியார் எங்கள் நாடு

மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு ஓர்
வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

தாயுமானவர் - பராபரக்கண்ணி 155

தீர்த்தங்கள் என்ற தொடர்ப்பிரயோகம் படிப்போரின் சிந்தனையைத் தூண்டி எங்கெங்கோ ஈர்த்துச் செல்கிறது. புண்ணிய தீர்த்தங்கள் எத்தனை எத்தனையோ எம் நினைவுக்கு வருகின்றன. தீர்த்தக் கிணறுகள், குளங்கள், கேணிகள், கடற்கரைகள், இராமேசுவரத்தில் இருந்து காசிவரை ஆடிய தீர்த்த அனுபவங்கள், கடற்தீர்த்தம், பட்டுத்தீர்த்தக் காட்சிகள் வலம் வருகின்றன. நினைக்க நினைக்க ஆனந்த பரவசம் ஏற்படுகிறது. பல தீர்த்தக்கரைகளும் கும்பமேளாவும் மனக்கண்ணில் தென்படுகின்றன. பாடல் பெற்ற தீர்த்தமேன்மைகள் எம்மைத் தீண்டுகின்றன. பாலாவியும், கீரிமலையும் திருவடி நிலையும், மாணிக்ககங்கையும், வல்லிபுரக் கடல் தீரமும் பசுமையான நினைவுகளே. கங்கைக்கு நிகரான தீர்த்தமும் இல்லை, காசிக்கு மேலான சேத்திரமும் இல்லை என்பர். கங்கையிற் புனிதமான காவிரி என ஆழ்வார்கள் அருளியுள்ளனர்.

கங்கையிற் புனிதமாய
காவிரி நடுவு பாட்டு!
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழி லரங்கந் தன்னுள்
எங்கள்மா லிறைவ னீசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்,
எங்ஙனம் மறந்து வாழ்கேன்
ஏழையே னேழை யேனே!

திருமாலை - 23 - திருநாலாயிரம்

கங்கை சிவனின் தலையணி கங்கையிற் காவேரி எப்படிச் சிறந்தது காவிரி ஸ்ரீரெங்கநாதனின் பாததாமரைகளைத் தொட்டுக் கழுவிக் கொண்டு பாய்கிறது. அதுவே அதற்கு மௌசு. இதனாலேதான் இறைவன் சிவன் கூடக் கங்கையாக அதை அணிந்துள்ளான் என்றும் ஓர் கதையுமுண்டு. எனினும் ஆழ்வார் திருவரங்கத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும்போது கங்கையாளும் வருகிறாள். அவள் கருணையைக் காட்டுகிறாள் என்பது கவிமணி கருத்து. (கங்கையுள் கருணை காட்டும்)

**கங்கநீர்ப யந்த பாத**
**பங்கயத் தெம் மண்ணலே**
**அங்கையாழி சங்கு தண்டு**
**வில்லும் வாளும் மேந்தினாய்**
**சிங்க மாய தேவ தேவ!**
**தேனுலாவு மென்மலர்**
**மங்கைமன்னி வாழுமார்ப!**
**ஆழிமேனி மாயவனே!**

24 திருச்சந்த விருத்தம்

நாம் ஆலயங்கள் போய்ப் பூசை முடிந்ததும் பூசகரிடம் தீர்த்தம் வேண்டி பருகி, தெளித்துப் புனிதம் அடைகிறோம். ஒரு கோடி தீர்த்தங்களும் நின் சரவணத்துள் அடக்கம் என முருக தீர்த்தத்தின் மகிமை பேசப்படுகிறது. பிள்ளைகளுக்கே தீர்த்தகரன், தீர்த்தலிங்கம் எனப்பெயர் வைக்கிறோம். ஆகத் தீர்த்தம் புனிதமானது. தூய்மையானது. தீராத நோயைத் தீர்க்க வல்லது. கங்கைநீர் கெடுவதில்லை. சைவ சமயிகள் போற்றும் புனித நீரே தீர்த்தம். வேறு சமயங்களிலும் தீர்த்தம் பேணப்படுகிறது அதற்கு அவ்வளவு மகிமை. அர்ச்சுனன் சிறந்த சிவபக்தன் அவன் தீர்த்த யாத்திரை சென்ற போது கண்ணபிரானும் உடன் போனான். சிவபூசை நேரம் வந்துவிட்டது. கண்ணன் தன்னையே சிவனாகப் பாவித்துப் பூசை செய்யும்படி சொன்னார். அர்ச்சுனனும் அவ்வண்ணமே செய்தான் இவர்கள் கைலை சென்றனர். அங்கே சிவன் தலையில் பூவைக்கண்டு பிரமித்துப் போயினர் என்பதை ஆழ்வார் வாக்கிற் காணலாம்.

**தீர்த்தன் உலகளந்த சேவடிமேல் பூந்தாமம்**
**சேர்த்தி யவையே சிவன்முடிமேல் தான்கண்டு**
**பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழா யான்பெருமை**
**பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே?**

திருவாய்மொழி 2: 9-6

சிவனும் பெருமாளும் வேறல்லர் என்ற உண்மையை இப்பாசுரம் தெளிவாய்க் காட்டுகிறது. ஆழ்வார் திருமாலைத் தீர்த்தன் எனக் குறிப்பது போலவே மணிவாசகரும் சிவனைத் தீர்த்தன் என்றழைக்கிறார்.

**ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்**
**தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்**
**கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்**
**காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி**
**வார்த்தையும் பேசிவளை சிலம்ப வார்கலைகள்**
**ஆர்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்**
**பூத்திகழும் பொய்கைகுடைந்துடையான் பொற்பாதம்**
**ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.**

திருவெம்பாவை 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த-கட்டிய, பிணித்த, ஆர்த்து-மகிழ்ந்து, தீர்த்தன்-பரிசுத்தன், (சிவன் கங்காதரன்) அவனுக்குத் தீர்த்தகரன் என்றும் பெயர்) குவலயம்-பூமி, மண்ணுலகு, கரந்தும்-சங்காரம் செய்தும், (அழித்தும்) வளை சிலம்ப-வளையல் ஒலிக்க, வார்கலை-நீண்டஒட்டியாணம், ஆர்ப்பு அரவம்-பெருத்த சப்தம், குடைந்து-மூழ்கி, ஏத்தி-துதித்து, இருஞ்சுனை-பெரிய நீரூற்று (குளம்) நீராடல்-மூழ்குதல், ஆகநம்மோடு தொடரும் பிறவித்துயரைத் தீர்க்க வல்லவன் இறைவன். அவனே தீர்த்தன். நாம் நீராடி உளமும், உடம்பும், புனிதமாய் இறைவழிபாடு செய்தால் நமக்கு ஆத்ம ஈடேற்றம் கிடைக்கும் என்பதை மறக்கக் கூடாது அன்றோ.

என்னதான் ஷேத்திரதாடனஞ் செய்தாலும், புனித தீர்த்தங்களில் நீராடினும், எங்கும் நிறைந்தவன் இறைவன். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்தவன் பார்க்குமிடமெங்கணும் பரமனே என்ற உண்மையை உணர்ந்து, எல்லா உயிர்களையும் இறைவனென நேசிக்காதவர்க்கு இறைபதம் கிட்டாதென்பதை உணர்த்துகிறார் அப்பர் பெருமான்.

**கங்கை யாடிலென் காவிரி யாடி லென்**
**கொங்கு தண்குமரித்துறை யாடி லென்**
**ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடி லென்**
**எங்கு மீசன் எனாதவர்க்கிலையே**

அப்பர் பெருமான்

படித்துறை பல ஆடும்போது இறை நிலையையும் உணர வேண்டும் அப்போது தான் தீர்த்தப் பயன் வந்தெய்தும். அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்-அருள்நோக்கிற் தீர்த்தம் ஆட்டிக்கொண்டாய் என்பதும் பாவேந்தரின் திருவாக்கு. நம் உள்ளத்திலே தான் சிவன்குடி கொண்டிருக்கிறான் அவன் குடி கொண்ட உள்ளத்திலேதான் பல தீர்த்தங்கள் உள என்பது திருமூலர் வாக்கு.

**உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்**
**மெள்ளக் குடைந்து நின் றாடார் வினைகெடப்**
**பள்ளமும் மேடும் பரந்து திரிவரே**
**கள்ளமனமுடைக் கல்வியி லோரே**

திருமந்திரம் 509

இது வரை பஞ்சபூதங்களில் ஒன்றான நீரோடு தொடர்புடைய தீர்த்தம் பற்றிக் கண்டோம். ஒரு தலத்தின் முச்சிறப்புக்களிற் தீர்த்தமும் ஒன்றாகும். இந்தத் தீர்த்த மகிமை போல ஒரு தலம் பாடல் பெற்றிருப்பதும், திவ்விய தேசமாய் அமைவதும் க்ஷேத்திர மகிமையாம். நமது மண்ணிலும் பாடல் சான்ற தலங்களாகக் கேதீஸ்வரமும், கோணேஸ்வரமும் அமைந்துள்ளன. கதிர்காமம் பற்றி அருணகிரியார் பாடியுள்ளார்.

தீர்த்தம் பற்றிய கருத்துக்கள் சமய மேம்பாட்டின் முத்திரை எனலாம். இதையும் தாண்டி நம்மாழ்வாரின் சிந்தனை வீச்சு அலைபாய்கிறது. அஃது ஒரு புதுமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம். இறைவன் தூண்டுதலால் ஸ்ரீமந்நாராயணன் பேரில் எழுந்த தமிழ்ப் பாசுரங்களைத் தீர்த்தம் எனக் கவிபண்ணியவர் அவர் ஒருவர்தான்.

தீர்த்தனுக் கற்றபின் மற்றோர்
சரணில்லை யென்றெண்ணி, தீர்த்தனுக்கே
தீர்த்த மனத்தன னாகிச்
செழுங்குரு கூர்ச்சடகோபன் சொன்ன,
தீர்த்தங்க ளாயிரத் துள்ளிவை
பத்தும்வல் லார்களை, தேவர்வைகல்
தீர்த்தங்களே யென்று பூசித்து
நல்கி யுரைப்பர்தம் தேவியர்க்கே

திருவாய்மொழி 7: 10-11

தீர்த்தன்-திருமால், தீர்த்தமனம்-புனித உள்ளம், தீர்த்தங்கள்-கவிதைகள்-பாசுரங்கள் பாடல்கள், கவிதையின் நிறைந்த பொருளாய் மிளிர்பவர் திருமாலே என்பதால், இறைபுகழ் பாடும் பாசுரங்களும் தீர்த்தங்களே. ஆலயமூலக் கருவறையில் காட்சியளிக்கும் கண்ணனை வைணவம் அர்ச்சாவதாரம் என்று போற்றுகிறது. அர்ச்சை என்றால் விக்கிரகம். தெய்வத்திருமேனி, வடிவம் என்று பொருள். இறைவன் கீர்த்திபேசும் திருமேனியாய் அமைந்த பக்திப்பாசுரங்கள் தீர்த்தங்களே என்பது சடகோபரின் தெளிந்த கருத்து. இவை என்னாற் பாடப்பட்டவையல்ல. என்னைத் தன்னாக்கிப் பாடவைத்த பாடல்களே இவையென அவரே திருவாய் மலர்ந்துள்ளார்.

சொன்னால் விரோதமிது ஆகிலும்
சொல்லுவன் கேண்மினோ
என்னாவில் இன்கவி யானொரு
வர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா தென்னாவென்று வண்டு
முரல்திரு வேங்கடத்து
என்னானை என்னப்பன் எம்பெரு
மானுள னாகவே

திருநாலாயிரம் 2885

என்னாவ தெத்தனை நாளைக்குப்
போதும் புலவீர்காள்
மன்னா மனிசரைப் பாடிப்
படைக்கும் பெரும் பொருள்
மின்னார் மணிமுடி விண்ணவர்
தாதையைப் பாடினால்
தன்னாகவே கொண்டு சன்மம்செய்
யாமையும் கொள்ளுமே

மேலது 2988

வம்மின் புலவீர்! நும் மெய்வருத்
திக்கைசெய் துய்ம்மினோ
இம்மன் னுலகில் செல்வரிப்
போதில்லை-நோக்கினோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நும்மின் கவிகொண்டு நும்நுமிட்
டாதெய்வம் ஏத்தினால்
செம்மின் சுடர்முடி என்திரு
மாலுக்குச் சேருமே.

மேலது 2990

என்றைக்கும் என்னையுய் யக்கொண்டு போகிய
அன்றைக்கன் றென்னைத்தன் னாக்கியென் னால்தன்னை
இன்றமிழ் பாடிய ஈசனை யாதியாய்
நின்ற வென் சோதியை என் சொல்லி நிற்பனோ

மேலது 3425

என்சொல்லி நிற்பனென் இன்னுயி ரின் றொன்றாய்
என்சொல்லால் யான் சொன்ன இன்கவி யென்பித்து
தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்என்
முன் சொல்லும் மூவரு வாகும் முதல்வனே

மேலது 3426

ஆம்முதல் வனிவனென்றுதற் றேற்றி என்
நாமுதல் வந்து புகுந்துநல் லின்கவி
தூமுதல் பத்தர்க்குத் தான்தன்னைச் சொன்ன என்
வாய்முதல் அப்பனை என்று மறப்பனோ?

மேலது 3427

சீர்கண்டு கொண்டு திருந்துநல் லின்கவி
நேர்பட யான்சொல்லும் நீர்மை யிலாமையில்
ஏர்விலா என்னைத்தன் னாக்கியென் னால்தன்னை
பார் பரவு இன்கவிபாடும் பரமரே

மேலது 3429

பாடியவன் நீ,நானாகி நின்றவன் நீ, என்கவி எல்லாம் நின்கவி, பாட்டும் நீ பாட்டின் பொருளும் நீ என்று நைச்சிய பாவத்தில் நம்மாழ்வார் வடித்த திருவாய் மொழியாயிரங்கள் என்பதைப்பதிகந்தோறும் அமைந்த இறுதிப்பாசுரமான முத்திரைக்கவிதை (பலிச்ருதி) தோறும் பாடிவைத்துள்ளார். வரலாறு சொல்லும் இந்த இறுதிப் பாசுரங்களெல்லாம் தமிழாகவே சொரிகின்றன. ஆயிரம் பாடல்களுமே தீர்த்தங்களாய் மிளிர்கின்றன. எனவே இப்பாசுரங்களைப் பாராயணம் பண்ணினால் தீர்த்தமாய் நம்பிறவிப்பிணியை நீக்கி வைகுந்தத்து உய்க்குமே என்பது உறுதியாம்.

நாக்கொண்டு மானிடம் பாடேன், நல மாகத்
தீக்கொண்ட நெஞ்சுடையான் சென்று என்றும் பூக்கொண்டு
வல்லவாறேத்த மகிழாத, வைகுந்தச்
செல்வனார் சேவடிமேல் பாட்டு

நான்முதன் திருவந்தாதி 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து

# வீரனின் தர்மம்

**சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்**

அன்பான பிள்ளைகளே!

வணக்கம். நலம் தானே?

சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் சிறுபருவக் கதையை முன்பொருமுறை வாசித்தீர்களல்லவா?

அந்த மாவீரனின் வாழ்வில் பசுமையான சம்பவங்கள் நடந்துள்ளன. அவற்றில் ஒன்றை இன்று சொல்கிறேன்.

சிவாஜி தனது பதின்மூன்றாவது வயதில் 'வேதாரன்' என்ற கோட்டையைப் பகைவரிடமிருந்து கைப்பற்றினார். பதினேழு வயதில் மாபெரும் இந்து சாம்ராஜ்யத்தை உருவாக்கினார்.

அவருக்குப் பகைவர்களும் அதிகம். மிகச்சிறு இளைஞனை அவரது தீரமும், விவேகமும், புகழும் பகைவருக்குப் பொறாமையை வளர்த்தன. ஆபத்துக்களின் மத்தியிலும் துணிவுடன் ஆட்சி செய்தவர் சிவாஜி மன்னன். அவரது தலைநகரைச் சுற்றி ஒரு பெரும் மதிலை அமைத்திருந்தார். மதிலின் கோட்டைவாயில் மிகப்பெரியது. காலையில் ஆறுமணிக்குத் திறந்து, மாலை ஆறுமணிக்கு மூடி விடுவார்கள். காலை ஆறுமணிக்குப் பிறகுதான் கோட்டைக்கு வெளியில் உள்ளவர்கள் நகருக்குள் போகலாம். மாலை ஆறுமணிக்குள் கோட்டைக்குள் இருந்து வெளியேறி விடவேண்டும். இரவில் எக்காரணம் கொண்டும் அந்தப் பெரியகதவு திறக்கப்படமாட்டாது. உள்ளே வருபவர்களையும், வெளியே போகிறவர்களையும் காவலர் நுட்பமாகக் கவனிப்பார்கள். அரச விதிமுறைகள் மிகவும் கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட்டன.

இந்த நிலையில், ஒருநாள் ஒரு இளம் பாற்காரி மாலையில் நகரில் பால் விற்றுவந்தவள் சற்றுப்பிந்தி விட்டாள். அவள் கோட்டைக்கு வெளியே உள்ள கிராமத்தில் உள்ளவள். சமீபத்தில் தாய்மை அடைந்தவள். அவள் மாலை ஆறுமணி கழிந்த சில நிமிடங்களில் கோட்டை வாசலுக்கு ஓடி வந்தாள். அப்போதுதான் கோட்டை வாசலைக் காவலர்கள் இழுத்து மூடிக்கொண்டிருந்தனர். அவள் கெஞ்சினாள், "ஐயா பிறந்து சில நாட்களே ஆன என் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும். தயவு செய்து கதவிற்கு வெளியே என்னை விட்டுவிடுங்கள்" காவலர் மனமிரங்கவில்லை. "தயவு தாட்சண்யத்துக்கு இங்கே இடமே இல்லை! அரசகட்டளை தான் எங்கள் உயிர் மூச்சு" என்றபடி அந்தப் பெரிய கதவை இரும்பு உலக்கைகளால் தள்ளி மூடிவிட்டார்கள்.

அந்தப் பாற்காரப் பெண்ணான இளம்தாய் பதைபதைத்தாள். "நடுப்பகல் பாலூட்டித் தொட்டிலில் விட்டுவந்த பச்சிளம் குழந்தை பாலுக்கு அழுமே! என்ன செய்வேன்" என்று பதறினாள். அழுது மன்றாடினாள். பயனேதும் இல்லை. அவள் கோட்டை மதிலோரம் அழுதபடி நடந்து செல்வதை வேடிக்கை பார்த்திருந்தார்கள் காவலர். அடுத்த நாள் காலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமணிக்குக் கோட்டைக்கதவைத் திறந்தனர். கிராமத்து வியாபாரிகள் உள்ளே வந்தனர். அவர்களுடன் அதே இளம்பெண்ணான பால்காரி! காவலர் திகைத்தனர். "எப்படி இவள் வெளியே இருந்து வரமுடியும்! இவளை உள்ளே விட்டு நாம் தானே கோட்டை வாசலைப் பூட்டினோம்?"

காவலர் அந்தப் பெண்ணை கைது செய்தனர். அரச சபைக்கு கொண்டு போனார்கள். ராஜா அந்தப் பெண்ணை விசாரணை செய்தான். "அம்மா நீ நேற்று மாலை நகரின் உள்ளே நின்றிருக்கிறாய். இன்று காலை வெளியே இருந்து உள்ளே வந்திருக்கிறாய். இரவில் கோட்டை வாசலைத் தவிர வேறு ஒரு வழியாக நீ வெளியே போய் இருக்கிறாய். அந்த வழி எது. நீ தப்பிச் செல்ல உதவியவர் யார்"

அந்தப் பெண் பயத்தால் நடுங்கினாள். அழுதுகொண்டே பதில் கூறினாள். "அரசர் பெருமானே! எனக்கு பிறந்து இரண்டே மாதமான கைக்குழந்தை உள்ளது. வறுமை காரணமாக நானே பால் வியாபாரம் செய்கிறேன். நேற்று மாலை வியாபாரம் முடிய சில நிமிடம் தாமதமாகிவிட்டது. நான் வெளியே போகும் போது தான் காவலர்கள் கோட்டைக் கதவை மூடிக் கொண்டிருந்தார்கள். தயவு செய்து என்னை வெளியில் விட்டுவிடுமாறு கெஞ்சி மன்றாடினேன். அவர்கள் இரக்கமே காட்டவில்லை. என் பச்சைக்குழந்தைக்கு மத்தியானம் பால்கொடுத்து விட்டு வந்திருந்தேன். இரவில் அது பசியால்த்துடிக்கும் என்ற நினைவே என்னைப் படாத பாடு படுத்தியது. எப்படியாவது வெளியில் போய் விடவேண்டும் என்ற தவிப்பே என்னை விரட்டியது. மதில் ஓரமாக நடந்து சென்ற நான் அங்கே காணப்பட்ட சிறுகுன்றில் ஏறினேன். குன்றின் மேலும் மதில் தொடர்ந்து போகின்றது. ஆனால், குன்றில் உச்சியில் மதிலின் உயரம் மிகக் குறைவாக இருந்தது. நான் அதன்மேல் ஏறிப்பார்த்தேன். குன்றின் மறுபுறம் நன்கு புல் வளர்ந்து குன்றும் சரிவாக இருந்தது. அந்தச் சரிவில் மெல்ல உருண்டு அடிவாரத்தை அடைந்தேன். பக்கத்தில் என்வீடு. வீட்டுக்கு ஓடிப்போய் அழுதுசோர்ந்த என் குழந்தைக்கு பாலூட்டினேன் இன்று அதிகாலை பால்விற்க நகரத்திற்குள் வந்தேன். அரசே! நான் செய்தது மிகப்பெரும் குற்றம் தான். ஆனால் அந்த நேரத்தில் குழந்தைக்கு பாலூட்டி காப்பாற்ற வேண்டும் என்ற கவலையால் வேறு ஒன்றையும் நினைத்துப் பார்க்கவில்லை. என்னைத் தாங்கள் மன்னிக்க வேண்டும்" என்று அரசன் காலில் விழுந்து அழுதாள். அரசன் காவலரை அழைத்தான். அவளைக் கூட்டிச்சென்று அவள் தப்பித்துப் போன வழியை கவனித்து வருமாறு கட்டளையிட்டான். அவர்களும் கவனித்து வந்தார்கள். அவள் காட்டிய இடத்தில் குன்றின் அமைப்பும் தப்பிச் செல்ல வாய்ப்பாக மதில் உயரம் குறைவாகவும் இருப்பதைக்கண்டு வந்து கூறினார்கள்.

அரசன் சிவாஜி தன் கோட்டைக் காவலரை அழைத்தான். மாலையில் கோட்டை வாசலை மூடி விட்டாலும் தற்செயலாக இதேபோல் தாமதித்து வரும் பெண்களை திட்டிவாசல் எனப்படும் சிறிய வாசல் மூலம் வெளியே விடவேண்டும் என்று கட்டளையிட்டான். அத்துடன் குன்றின் மீது உயரம் குறைவாய் உள்ள மதிலை உடனே உயர்த்திக்கட்டி காவலைப் பலப்படுத்துமாறு தளபதிக்கு கட்டளையிட்டான். பின் அந்த இளம் தாயை அன்புடன் பார்த்தான். "தாயே! எனது ஆட்சியில் உள்ள சில பலவீனங்களை சுட்டிக்காட்டினாய். உனக்கு நன்றி. உன்னை எனது காவலர் கைது செய்ததற்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன்" என்று கூறி அவளை விடுதலை செய்தான். பரிசுபல கொடுத்து அனுப்பிவைத்தான்.

பிள்ளைகளே! ஒரு சாம்ராஜ்யத்தையே கட்டி எழுப்பிய மன்னன் சிவாஜியின் மனிதத்தன்மையைப் பார்த்தீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 13



# கந்தபுராண சிறுவர் அமுதம்

- மாதாஜி

## பு0. சயந்தன் கண்ட கனவு

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது," என்பது குறள். அசுரனின் சிறையில் நூற்றெட்டு யுகங்களாக அடிமை வாழ்வுடன், தண்டனையும் பெற்று வாழ்ந்து வந்த சயந்தன், போக வாழ்வு என்றும் துன்பம் தரும் அதனால் சிவ வாழ்வுதான் சிறந்தது என நினைந்தான்.

**"தண்டேன் துளிக்கும் தருநிழற்கீழ் வாழ்க்கைவெஃகி**
**கொண்டேன் துயரம் வான்பதமும் கோதென்றே**
**கண்டேன் பிறர்தம் பதத் தொலைவும் கண்டனனால்**
**தொண்டேன்சிவனே நின் தொல் பதமே வேண்டுவனே"**

என்று அல்லும் பகலும் இறைவனைப் பிரார்த்தனை செய்தான் சயந்தன். இவ்வாறு தியானம் செய்து சோகமாக உறக்கம் கொண்டான். அப்போது கருணைக் கடலாம் முருகவேள், அவனது கனவில் மூவிரு முகமும் பன்னிரு தோளும் கரங்களுமாகத் தோன்றினார்.

**"வீறுகேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்**
**மாறிலாத வேல் அபயமேவலம்; இடம் வரதம்**
**ஏறு பங்கயம் மணிமழுத்தண்டுவில் இசைந்த**
**ஆறிரண்டுகை அறுமுகம் கொண்டுவேள் அடைந்தான்"**

இவ்வாறு கனவு கண்டதாக கந்தபுராணம் கூறுகின்றது. கனவில் முருகனைக் கண்டதும் முருகனின் காலில் வீழ்ந்து வணங்கினான், "சுவாமி தாங்கள் யார்?" என்று கேட்டான் சயந்தன். முருகப்பெருமான் தன்னை அறிமுகம் செய்தார். வருந்தாதே சயந்தா, விரைவில் வீரவாகுதேவர் ஆறுதல் கூற வருவார், எனத் திருவாய் மலர்ந்து மறைந்தார். சயந்தனுக்கு ஆறுதல் கூறியது போலவே முருகப்பெருமான் மற்றத் தேவர்கட்கும் ஆறுதல் கூறி மறைந்தார்.

வீரவாகுதேவர் சிறைச்சாலையை அடைந்தார். மோகன மந்திரத்தால் சிறைக்காவலாளிகளை மயக்கினார். சிறைச்சாலைக்குள் சென்றார். வீரவாகுதேவர் முருகப்பெருமானின் தூதர் என ஊகித்தான். பின்னர் வீரவாகுதேவர் தன்னைச் சயந்தனுக்கு அறிமுகம் செய்தார் "இனிமேல் எங்கள் துன்பம் நீங்கியது எனச் சயந்தனும் தேவர்களும் கூறி மகிழ்ந்தார்கள். சிவபெருமானே முருகனாக வந்தாரெனப் பிரார்த்தனை செய்தார்கள். பின்னர் வீரவாகுதேவர் சிறைக்கூடத்திலிருந்து புறப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ፊ1. சேவலும் மயிலும்

சேவலானது அதிகாலையில் சூரியன் உதிக்குமுன் எழுந்து இருசிறகுகை களையும் அடித்துக் கொக்கரைக்கோ என்று கூவும். அப்போது மக்கள் விழித்திடுவர். சேவல் நாதத்தின் சின்னம். உருவ அழகில் சிறந்தது மயில். அது பிந்துவின் சின்னம். அதுவே பிரணவமுமாம். வேலாயுதம் ஞானத்தின் வடிவம். சண்முகநாதன் ஆனந்த வடிவம். இவை என்றுமுண்டு.

கந்தவேளின் சேவல் மயில் இவற்றின் பூர்வீக சரித்திரம் பற்றி இப்போது காண்போம்.

ஒரு காலத்தில் சுக்கிலவாது தேசத்தின் அரசருக்கு இருபுதல்வர்கள் இருந்தார்கள்! பெருமானே தாங்கள் யாரை வணங்குகின்றீர்களென அகத்தியாரை இருபுதல்வர்களும் கேட்டார்கள். அகத்தியர் நான் முருகப்பெருமானை வணங்குகின்றேனெனக் கூறினார். எப்போதும் முத்தியின்பம் வேண்டுபவர்கள் அதிக தவம் செய்வார்கள். முருகப்பெருமானுக்கு மயில்வாகனமாகவும் சேவற் கொடியாகவும் இருந்தால் முருகப்பெருமானின் பாததுளிகள் படுதலால் முத்தியுண்டு என அகத்தியர் அருளினார்.

இதனைக் கேட்ட அரசர்கள் இருவரும் இமய மலைச்சாரலில் அகத்தியரிடம் சுப்பிரமணிய மந்திரம் பெற்று பஞ்சாக்கினியில் கடுந்தவம் செய்யத் தொடங்கினார்கள். அவர்களின் உள்நோக்கம் மயிலும் சேவலுமாய் சுப்பிரமணியக் கடவுளுக்குப் பணிசெய்யவாகும்.

கயிலை மலையில் சிவபெருமானைத் தரிசிக்க திருமால், பிள்ளையார், முருகப்பெருமான் (சரவணப் பொய்கையில் அவதாரம் செய்ய முன்பு) இவர்கள் சுவாமியிடம் போக முன், பிள்ளையார் மூஷிகவாகனத்தையும், திருமால் கருட வாகனத்தையும், முருகப்பெருமான் சேவல் மயிலையும் அம்மலையின் அடிவாரத்தில் விட்டு விட்டுச் சென்றனர். பிரமாவும் அன்னத்தையும் விட்டுச் சுவாமியிடம் சென்றார்.

கருடனும் அன்னமும், சேவலையும் மயிலையும் நோக்கி, “நீங்கள் உயர்பதவியில் இருக்கிறீர்கள். உங்கள் பதவிக்கு ஆசைப்பட்டு, உங்களுடைய பதவி அபகரிக்க வேண்டுமென இரண்டு அரசகுமாரர்கள் தவம் செய்து கொண்டிருக்கின்றார்கள்” என்று கோள்மூட்டின. உடனே மயிலுக்கும் சேவலுக்கும் கோபம் உண்டாகவே அவை இரண்டு அரச குமாரர்களைத் தாக்கின. அரசகுமாரர்கள் இவ்வாறு தாக்குதலின் மூலகாரணத்தை அறிந்தார்.

வேறொருநாள் பிரமா, திருமால், கணபதி, முருகப்பெருமான் கயிலைக்கு வந்தார்கள். முன்போலவே வாகனங்களைக் கீழேவிட்டு மேலே சென்றார்கள். அரசகுமாரர்கள் பழிக்குப் பழி வாங்க சந்தர்ப்பம் இதுதான் என்று நினைத்தார்கள். சேவலும் மயிலும் நிற்குமிடம் சென்றார்கள். “உங்களிடம் பலமே இல்லையாம்! கருடன் சிறகசைத்தால் மலையே அசையுமாம் உங்கள் இருவருக்கும் அத்தகைய ஆற்றல் இல்லையாம். என் அழகு அந்த சேவலுக்கும் மயிலுக்கும் வருமா? என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம் வேறு பெருமை பேசுகிறது" என்று கூறினார்கள். உடனே வெஞ்சினம் கொண்ட சேவலும் மயிலும் அன்னத்தையும் கருடனையும் கொன்று விட்டன. இச்செய்தியை அறிந்த நாராயணமூர்த்தியும் பிரமாவும் அறிந்து முருகப்பெருமானுக்கு முறையிட்டார்கள்.

முருகப்பெருமான் கருடனையும் அன்னத்தையும் உயிர்பெறச் செய்தார். பின்னர் கருடன், மயில், அன்னம் சேவல் எல்லாவற்றையும் விளக்கம் செய்தார். இராச குமாரர்கள் மீது குற்றம் அதிகமாகக் காணப்படவே, இராசகுமாரர்களை சூரனாகப் பிறக்கும்படி முருகன் சாபமிட்டார். நான் உன்னுடைய போரில் வந்து உன்னை சங்கரிக்கும் போது, நீ மயிலும் சேவலுமாகி தொண்டு செய்வீர்களாக எனச் சாபவிமோசனம் கொடுத்தார்.

சிவபெருமானும் முருகனும் வேறல்லர். இருவரும் ஒன்றேயாகும். சிவபெருமான்-நெருப்பு. நெருப்பில் உள்ள சூடு உமையவள். நெருப்பின் சிவப்பு-கணபதி. நெருப்பின் ஒளி-முருகன்.

## ௰. பகைவனுக்கும் அருள்

வீரவாகுதேவர் சிறைக்கூடத்தினின்றும் அசுரேந்திரனின் நகரை நோக்கி வானவீதியாகப் போய்க் கொண்டிருந்தார். மகேந்திரபுரியின் அழகை வியந்தார். போரினால் இந்த அழகான மகேந்திரபுரி அழியப் போகிறதே என்று வருந்தினார். "நான் சூரபன்மனிடம் சயந்தனையும் தேவர்களையும் சிறையில் இருந்து விடுவிக்கச் சொல்லுவேன். அவ்வாறு சூரன் செய்தால் மகேந்திரபுரி பிழைத்தது. அல்லாவிடின் போரினால் மகேந்திரபுரி அழியும். விதியை வெல்ல யாரால் முடியும்". என்று கழிவிரக்கத்துடன் சூரபன்மனின் அரண்மனையில் புகுந்தார்.

சூரபன்மன் உயர்ந்த சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். கால்மேல் கால் போட்டுக் கொண்டான். வீரபத்திரதேவர் தாழ்வான ஆசனத்தில் இருக்க விரும்பவில்லை. முருகப்பெருமானைத் தியானம் செய்தார். அக்கணமே மிகவும் உயரமான சூரியப்பிரகாசமுடைய சிங்காசனம் அவ்விடத்தில் வந்தது. வீரவாகுதேவர் அதிலமர்ந்தார்.

சூரபன்மன் பார்வையில் வீரபத்திரர் முருகப்பெருமானின் தூதுவராக இருக்கலாம் என்று ஊகித்தான். அதனால் சூரன் வீரவாகுதேவரை நோக்கி, "நீர் இந்தச் சிம்மாசனத்தை வரச் செய்தீர். இது என்ன பெரிய காரியமா? எனது நகரத்தில் மூன்று மாதக் குழந்தையும் செய்துவிடும் அது இருக்கட்டும் நீ யார்? ஏன் இங்கு வந்தாய். என்னிடம் தேவர் முதலானோர் பயந்து இவ்வரண்மனைக்கு வரமாட்டார்கள். வந்த அலுவலைச் சீக்கிரம் கூறு" என வெகுண்டபடி சூரபன்மன் கேட்டான்.

தேவேந்திரனின் குறை தீரும்பொருட்டும், தேவர்களின் சிறை மீட்கும் பொருட்டும் திருச்செந்தூர் வந்திருக்கும் ஆதிப் பரம்பொருளாக இருக்கின்றவரின் அடியவன் நான் என வீரவாகுதேவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரபன்மன் ஆச்சரியப்பட்டான். "முருகனைப் பற்றிக் கேட்டிருக்கின்றேன். தேவர்களுக்கு உதவி புரிய அவன் முயல்வதை அறிவேன். எனது சகோதரன் தாரகனை அவன் கொன்றதையும் அறிவேன். அவன் பால்மணம் மாறாத பாலகனுடன் பெரும்போர் தொடுப்பது பழியென விட்டு விட்டேன். நீ அவனுக்குத் தூதுவன். வேண்டுமானால் அந்தக் குழந்தையே என்னிடம் வந்திருக்கலாம். சரி என்ன விசயம் சொல்" என்று கூறினான்.

காசிப முனிவர் உனக்குத் தந்தை. அதுபோல தேவர்களுக்கும் காசிபர் தந்தை. ஆகையால் எல்லோரும் சகோதரர்கள். எனவே நீ உனது சகோதரரைச் சிறைவைத்தது எவ்வளவு கொடுமை. இப்போதே அவர்களின் சிறையை நீக்கினால் இத்தோடு பிரச்சனை தீர்ந்து விட்டது. முருகனைச் சிறுவனென்று நினைக்காதே. முருகன் வேறு சிறுவன் வேறன்று.

**"ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயின்காண்**
**ஆசிலா அவன் அறுமுகத் துண்மையால் அறிநீ**
**பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன்**
**தேசுலா வகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல"**

என வீரபத்திரர் உபதேசம் செய்தார். மீண்டும் முருகப்பெருமான் பற்றி

**"எங்கணும் பணிவதனங்கள் எங்கணும் விழிகள்**
**எங்கணும் திருக் கேள்விகள் எங்கணும் கரங்கள்**
**எங்கணும் திருக் கழலடி எங்கணும் வடிவேல்**
**எங்கணும் செறிந்தருள் செயும் அறுமுகத் திறைக்கே"**

என்று கூறினார். முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாது. அசுரர் கோன் அழிவுப் பாதையில் நின்றமையால் தேவர்களைச் சிறையில் இருந்து விடுவிக்க விரும்பாது நின்றான். வீரவாகுதேவரின் நல்லுபதேசம் விழலுக்கு இறைத்த நீராகியது. உயிரை விடுவேன் தேவர்களை சிறையிலிருந்து விடமாட்டேனெனச் சூரபன்மன் சபதம் கூறினான். "அப்படியானால் நீ ஐயனின் வேலால் அழிந்து போ" என்று வீரவாகுதேவர் கூறிவிட்டு வெளியே கிளம்ப அவருடைய ஆசனமும் மறைந்து விட்டது.

சூரன் தூதுவராகிய வீரவாகுதேவரைப் பிடித்துச் சிறையிலிடும்படி அசுரருக்குக் கட்டளையிட்டான். தன்னைப் பிடிக்க வந்த ஆயிரம் அசுரர்களை அப்படியே கொன்றுவிட்டு வீரவாகுதேவர் புறப்பட்டார்.

✡ ✡ ✡

சின்ன வயதிலேயே சத்தியம், நேர்மை, மன அடக்கம், மன உறுதி, மனத்திருப்தியாகிய இவற்றைப் பழகிக் கொண்டால், இறக்கும் வரைக்கும் இவைகள் நிலைத்திருக்கத்தக்கவை. **அறப்பற்றும், பிற உயிர்களில் இரக்கமும், யாவரும் கடவுளுடைய குழந்தைகள்** என்ற எண்ணமும் உறுதிப்பட்டால் ஆசைகள் தாமாகவே அடங்கி நிற்கும்.

சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினைகளை வேரோடறுக்கும் மருதடி விநாயகப் பெருமான்

செல்வி சிந்துஜா கதிர்காமநாதன்

பிரணவத்தை தனது வடிவமாகக் கொண்ட விநாயகப் பெருமானை சிவபெருமானின் மூத்த திருக்குமாரர் என்று நமது பழம் பெரும் புராணங்கள் பகருகின்றன. தம்மை நினையாதவர்களுக்கு விக்கினங்களை ஏற்படுத்துவதனாலும் தம்மை அன்புடன் வழிபடுபவர்களுக்கு விக்கினங்களை நீக்கி அருள்பாலிப்பதாலும் இவருக்கு விக்கினேஸ்வரர், விக்கினராசர் என்ற காரணப் பெயர்களும் உண்டு. சிவனும் விநாயகரும் ஒருவரே என நம்பும் சைவப் பெருமக்கள் எக்கருமத்தைத் தொடங்கும் முன்பும் விநாயகரை வணங்கி எம்பெருமானின் அருள் பெற்றுய்வதை வழக்கத்தில் கொள்கின்றார்கள்.

சைவ சித்தாந்த சாத்திரங்களில் விநாயகப்பெருமானின் பெருமைகள் நன்கு புலப்படுத்தப்பட்டிருக்கின்றன. சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் விநாயகப் பெருமானை எக்கருமம் தொடங்கு முன்னரும் அக்கருமம் இடையுறாது தடையின்றி வெற்றிபெற வணங்கல் வேண்டும் என்பது மிகவும் ஆணித்தரமாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. இதை சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் படித்தவர்கள் நன்கு அறிவார்கள். ஆன்மாக்கள் அருள் பெற்றுய்யும் பொருட்டு பரமபதியாகிய சிவன் எடுத்த மூர்த்தங்களில் ஒரு மூர்த்தமான மூஷிக வாகனனை வணங்குவது சிவனைப் பணிவதற்கு ஒப்பானது. தன்னை மெய்யன்போடு வணங்குபவர்களின் துன்பங்களை நீக்கும் விநாயகப் பெருமான் ஆன்மாக்களின் அஞ்ஞானத்தை நீக்கி ஆன்மாக்களின் அறிவிற்கு அறிவாக விளங்குகின்றார்.

பருத்த வயிறும், தேவசரீரமும் யானை முகமும் ஒற்றைக் கொம்பும் மூன்று திருக்கண்களும் இரு செவிகளும் துதிக்கையுடன் ஐந்து திருக்கரங்களும் இரண்டு திருவடிகளும் விநாயகப் பெருமானின் அங்கலட்சணங்களாகும். இவ்வகையான இலட்சணங்களுடன் மெய்யடியார்களுக்கு அருள் செய்யும் உயர் தெய்வம் கணங்களுக்கே நாதனாய் விளங்கிக் கணநாதன் என்று பெயர் பெற்ற விநாயகக் கடவுளாவார். சூரியன், சந்திரன், அக்கினி என்ற முப்பெரும் சக்திகளைத் தன்னகத்தே கொண்டவர் என்பது அவர் பால் உள்ள மூன்று திருக்கண்களும் விளக்குகின்றன.

விநாயகர் வணக்கத்தில் தேங்காய் அடித்தல் மிக முக்கியமானதொரு நிகழ்ச்சியாகும். இளந்தேங்காயும், முதிர்ந்த தேங்காயும் விநாயகர் முன்னிலையில் அடிக்க ஏற்றவையல்ல கணபதிக்கு உடைக்கும் தேங்காய் முடியுடன் இருத்தல் அவசியம்.

கஜமுகாசூரனைத் தேவர்கள் பொருட்டு விநாயகப் பெருமான் சங்கரித்ததனால் தேவர்கள் பெரு மகிழ்ச்சியில் இரு கரங்களினாலும் எதிர் எதிராக காதுகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் கொண்டு கணைக்காலும் தொடைகளும் ஒன்றை ஒன்று தழுவும்படி மூன்று முறை தாழ்ந்து எழுந்து வணங்கினார்கள். அதன் பிற்பாடு அகத்திய முனிவர் சிவபக்தன் இராவணன் இவ் வணக்க முறையைக் கைக் கொண்டு விநாயகப் பெருமானின் அநுக்கிரகம் பெற்றுய்ந்தார்கள் என்பது எமக்குப் புராணங்களில் இருந்து கிடைக்கப் பெறும் தகவல்களாகும். இவ்வணக்க முறைகள் சைவ மக்களால் அன்று தொட்டு தொடரப்பட்டு வந்ததும் தற்பொழுது எம்மால் அனுஸ்டிக்கப்படாமல் இருந்து வருகின்றது.

போலி வாழ்க்கையும், ஆடம்பரமான ஆலய தரிசனமுமே தற்கால சமய பழக்க வழக்கங்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கி வருகின்றன. இந்நிலை மாறி விநாயகப் பெருமானை மனதில் பிரார்த்தித்து அவர் கோவிலுக்குச் சென்று யான், எனது, என்னும் மமதைகள் அகந்தைகள் யாவும் அறவே நீங்கும் படியாக மும்முறை தாழ்ந்து முறைப்படியாக வணக்கஞ் செலுத்தி சிறுமைகள் மிக்க யாம் பெருமைகள் பெற வேண்டிச் செய்யும் கருமங்கள் எவ்வித விக்கினங்களும் இன்றி இனிது முடிவுற வேண்டும். விநாயகப் பெருமானை வாழ்த்தி வணங்குதலால் சகல சித்திகளையும் நாம் பெற இயலும் என்பது முக்காலமும் உண்மையானதன்றோ.

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

### விநாயகர் துதி

மின்னும் மருதடிவாழ் வேழமுகன்றாள் பணிந்து
பன்னுமவன் காதை பகர்ந்திடவே - மன்னுபுகழ்
நீட்டுமலை மேல் நிகழ்பா ரதம் வரைந்த
கோட்டு முகன் பாதங்குறி.

### நாமகள் துதி

விக்கினங்கள் நீக்க மருதடியில் வேழமுகன்
புக்ககதை யாவும் புகலவே - மிக்கபுகழ்
வன்னமே வுங்கமல மாமலர் மேல் வீற்றிருக்கும்
அன்னமே முன்னின்றருள்.

## மருதடி விநாயகர்

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்தால் ஓர் ஆலயத்திற்குச் சிறப்பாகும். மூர்த்தி-விநாயகர், தலம்-மருதமரம், தீர்த்தம்-அமிர்தபுஸ்கரணி இவை அமைந்த இடம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமாகும்.

தனக்கு மேல் நாயகன் இல்லாதவன் விநாயகன். பூதகணங்களுக்கு அதிபதி கணபதி வாழ்க்கைக்கு ஆண் பெண் இணைப்பு அவசியம். விநாயகர் மூர்த்தம் இதனை உணர்த்துகிறது. அதாவது தந்தமுள்ள பகுதி ஆண்கூறு தந்தமற்ற பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் கூறு. மேலும் புலால் மறுத்தலில் அகிலத்தையும் சைவ உணர்வும் மேன்மையையும் யானைமுகம் குறிப்பால் உணர்த்துகின்றது. அளவிடற்கரிய யானை உண்பது தாவர உணவு தான். ஐந் தொழில்களும் இறைவுமில்லாமல் நடைபெற வேண்டும் என்பதை கணபதியின் ஐந்து கரங்கள் குறிக்கின்றன. இவ்வுலகில் பஞ்ச கோசங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

i. அன்னமய கோஷம் - அதிபதி விஷ்ணு
ii. புராணமயகோஷம் - அதிபதி பரமேஸ்வரன்
iii. மனோமயகோஷம் - அதிபதி சக்தி
iv. விஞ்ஞானமயகோஷம் - அதிபதி சூரியன்
v. ஆனந்தமயகோஷம் - அதிபதி விநாயகர்

ஆனந்தம் வேண்டுபவர் விநாயகனை வழிபடவேண்டும். விநாயகர் வீற்றிருக்கும் இடம் ஆனந்த புவனம். அவரின் வடிவமோ ஓங்கார வடிவம் அதாவது ஒருமைப்பாடு என்ற உயர்ந்த உட்பொருள் தத்துவத்தை விளக்குவதே ஓங்கார வடிவமாகும். இவர் ஆனந்தமயமானவர். ஞானவடிவானவர். வன்னிப்பாத்திரம் விநாயகருக்கு உரியது.

எம் பெருமானாகிய மருதடி விநாயகர் ஆலயத்தின் மூலஸ்தானத்திலே ஆகுவாகனனாகக் காட்சி தருகின்றார் எல்லா ஊர் மக்களையும் தன்பால் கவர்கின்றார். கவலையுடன் வரும் மக்களை ஆனந்தமாக்குகிறார். இவருக்கு பதினெட்டு நாட்கள் மகா உற்சவம் நடைபெறுகின்றது. இவர் பதினெட்டு த்வீபங்களுக்கு அதிபதி பதினெட்டு புராணங்களை வகுத்தவர் பதினெட்டு ஒலிகளைப் படைத்தவர். பதினெட்டு ஸ்மிதிகளின் வடிவினன். பதினெட்டு எழுத்துக்களில் தனிக்கூட்டு அறிவில் சமர்த்தார். 1ஆம், 5ஆம், 9ஆம் தோஷமுடையவர்கள் விநாயகரை வழிபட்டால் நன்மை அடையலாம். இந்த ஆலயம் மேற்கு நோக்கியுள்ளது. மேற்குமுகம் சத்தியோதயாத முகம். இது அனுக்கிரகமுகம் இது எல்லாவற்றையும் விட சிறப்பானது இத்தனை சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்டு விநாயகப் பெருமான் மருதநிழலிலே அடியவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டு இருக்கிறார்.

## மானிப்பாய் மருதடி விநாயகா

மானிப்பாய்ப் பதியினில் வீற்றிருக்கும்
மருதடி விநாயகா
மாமயிலைக் தையிலையில் வீற்றிருக்கும்
சிவன் சக்தியின் மூத்த பிள்ளையே.

மேற்குப் பக்கம் நோக்கியே
வீற்றிருக்கும் கணபதியே
எங்கள் வினையெல்லாம் தீர்க்கவரும்
மானிப்பாய் மருதடி விநாயகா



கொடியேற்றம் காண வந்தோம்
மருதடி விநாயகா
மருதமர நிழலில் அமர்ந்தே
அருளிடும் விநாயகா

சித்திரை வருஷப் பிறப்பிலன்று
ரதம் ஏறிடும் விநாயகா
பச்சைசாத்தி குளிர்த்தி காணும்
பஞ்சமுக விநாயகா.

**செல்வி கிருஸ்ணசாமி துர்க்காம்பிகை.** மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கமுடைமை

செல்வன் யோகேந்திரா கோபிநாத்
யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று உலகப் பொருளனைத்தையும் ஈரடியால் உரைத்த நம் தமிழ்ப்புலவனின் கருத்து. "உயிரின் ஆக்கம் ஒழுக்கத்தைப் பற்றிக் கிடப்பது" இதனால் உயிரினும் மேலாக ஒழுக்கம் ஓம்பப்படும் என்னும் வழக்கு எழுந்தது போலும். மரத்திற்கு ஒளி, காற்று, மண், புனல் இன்றியமையாதன அதே போலவே உயிர்களுக்கு ஒழுக்கம் இன்றியமையாதது. ஒழுக்கம் இல்லையேல் உயிர்கள் பிறவிப் பயனைத் துய்த்தல் அரிது. உயிர் நலத்திற்கு உடல் நலம் வேண்டற் பாலது. இதனை,

"உடம்பார்அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேனே
பாடல் - 724

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்என்று
உடம்பினையானிருந் தோம்புகின்றேனே" பாடல் - 725

என மூவாயிரம் ஆண்டுகள் நிலையற்ற இவ்வுலகிலே வாழ்வாங்கு வாழ வழி சொல்லித் தந்த திருமூலர் திருவாக்கால் அறியலாம்.

இதற்கு செந்நாப்போதர் வள்ளுவரும் விதி விலக்கல்ல. தான் இயற்றிய 133 அதிகாரத்தில் பதின்நான்காவது அதிகாரமாக ஒழுக்கமுடைக்காக ஒதுக்கியதிலிருந்து ஒழுக்கத்தின் சிறப்பு அறியப்படும். இதைவிட ஒழுக்கத்தை எவ்வகையிலும் கெடாதவாறு வருந்திக் காக்க வேண்டும். பலவகை அறங்களையும் ஆராய்ந்து எவ்வளவு கவனமாகத் தேர்ந்தாலும் அவ்வொழுக்கமே துணையாக அமையும் என்ற கருத்துப்பட,

"பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை"

என்று சாடுகின்றார். பொறாமை உள்ளவனிடத்தில் ஆக்கம் இல்லாதது ஒழுக்கமில்லாதவனிடத்தில் உயர்வு இல்லாததற்கு உவமிக்கப்படுகிறது. "இழுக்கத்தில் ஏதம் பாடுபாக்கறிந்து" எனும் குறட்பாமூலம் குல இழிவாகிய கேடு உண்டாவதனை அறிந்து அறிவுடையோர் ஒழுக்கத்தில் தவறவே மாட்டார் என்று போற்றுகின்றார்.

ஏன்? பெண் புரட்சிக்கவிஞன் பாரதிகூட இதற்கு விதி விலக்கல்ல.

"ஒழுக்கம் சிறந்தது பாப்பா - அது
உயிரிலும் உயர்ந்தது பாப்பா"

என்று முழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் குழந்தையை ஒழுக்கசீலனாய் வளர்க்கும் உத்தம பொறுப்பு பெற்றோரிடமே உள்ளது என்ற கருத்துப்பட கவிஞன் "எந்தக் குழந்தையும் மண்ணிற் பிறக்கையில் நல்ல குழந்தை தான். அவர் நல்லவர் ஆவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்று முறையிடுகின்றார். உடல் நலத்திற்கு அழகு அவசியம். எவன் பால் அழகு பொலிகிறதுவோ அவன் உடல் வளமுடையவனாவான். அழகோம்ப மேல்நாட்டவர் பல கலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். உடல் நலத்திற்குரிய அழகைக் காக்க நம்முன்னோர் ஒழுக்கநெறி காட்டினர்.

நல்லொழுக்கமுடையோன் வாழ்வில் அழகும், செழுமையும் செழித்துக் கொண்டிருக்கும் அவன் உள்ளத்தில் சீற்றம் முதலிய தீ நீர்மைகள் உறுத்தல் அரிது. தீ நீர்மைகள் பெரிதும் உரம் உடல் இல்லாதவனிடத்து உறுத்தல் இயல்பு.

ஒழுக்கத்தைக் காப்போர் நீண்டநாள் உலகத்திலே வாழ்தல் கூடும். அவர்கள் நோய்வாய்ப்படுதலும் அரிது. "ஒழுக்க நிகழ்ச்சிக்கு உறைவிடம் மனச்சான்று" என்று ஜேம்ஸ் ஆலன் கூறியுள்ளார். ஒருவன் கல்வியின்றி அறிவின்றி வாழலாம். ஆனால் ஒழுக்கம் இன்றி வாழ்தல் கூடுமா? ஒழுக்கம் இல்லா வாழ்வு வாழ்வாகுமா? ஒழுக்கம் உயர்குலத்திலும் விழுமியது. உயிரிலும் மேம்பட்டது. அது மக்கள் வாழ்விற்கு இன்றியமையாததல்லவா? "ஒன்றே குலம்" "ஒருவனே தேவன்" என்ற திருமூலர் பெருமானின் திருவாக்கிற்கமையவும் "ஏகம் சத்விப்ரா பௌதா வதந்தி" என்ற வேத வாக்கியத்திற்கமையவும், அரிது அரிது மானிடராதல் அரிது மானிடராயினும் கூன், குருடு, செவிடு. பேடு நீங்கிப் பிறத்தல் அரிதாகிய மானிடப்பிறவியை எடுத்த நாம் "உயர்ந்தவர்கள் நாம் எல்லோரும் உலகத்தாய் வயிற்று மைந்தர்" என்ற உன்னத கோட்பாடு எவ்வித சாதி மத வேறுபாடுமின்றி ஒழுக்கத்துடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

**"நல்லொழுக்கமே சிறந்த கல்வி - அதைப் பெற்றிட**
**என்றும் உழைப்போம்; ஏற்றம் பெறுவோம்"**

## வருக தாரண புத்தாண்டே!

வருக வருக புத்தாண்டே
மனதில் இன்பம் தருமாண்டே
வளங்கள் சேர்க்க வருமாண்டே
வாழிய வாழிய பல்லாண்டே

தமிழர் வாழ்வில் வருமாண்டே
தமிழைக் காக்கும் தமிழாண்டே
தெய்வ அருளால் பல்லாண்டே
வாழிய வாழிய புத்தாண்டே.

## மானிப்பாய் மருதடி விநாயகர் தேராம்

வீதியில் பவனி வரும் தேராம்
பக்தர்கள் இழுத்து வரும் தேராம்
ஆலயத்தில் தரித்து நிற்கும் தேராம்
ஆனை முகன் ஏறிவரும் தேராம்

மும்மலங்களை அழிக்க வரும் தேராம்
ஆனந்தக் காட்சி தரும் தேராம்
அதிசயமாய் பார்க்க வைக்கும் தேராம்
அற்புதம் நிறைந்த தேராம்.

**கிருஸ்ணசாமி கஸ்தனி,** தரம்-11 யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[அவுஸ்ரேலியா சிட்னி மாநகரில் அமைந்துள்ள சிட்னி முருகன் கோவில் தமிழ்க்கல்வி கலாசார மண்டபத்தில் "திருவாசகமும் நாமும்" என்ற தலைப்பில் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. க. வி. விக்கினேஸ்வரன் அவர்கள் ஆற்றிய உரையின் முதலாம் பாகம்]

# திருவாசகமும் நாமும்

குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு குருர்தேவோ மகேஷ்வரஹா
குரு சாக்ஷாத் பரப் பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ

தலைவர் அவர்களே, தமிழ்ப் பேசும் அவுஸ்திரேலியா சகோதர சகோதரிகளே! அவுஸ்திரேலியா வந்து தமிழில் பேசுவேன் என்று கனவில் கூட நான் நினைத்ததில்லை. அதுவும் திருவாசகம் பற்றி உங்கள் மத்தியில் பேசும் வாய்புக் கிடைத்ததையிட்டுப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். உண்மையில் திருவாசகம் பற்றிப் பேசும் அருகதை அற்றவன் நான். "28ஆந் திகதி திருவெம்பாவை ஆரம்பமாகிறது, அதற்கேற்ற ஒரு பொருள் பற்றிப் பேசுங்கள்" என்றார் நண்பர் ஜெயானந்தராஜா. அதனால் சிந்தியாமலே பேச்சின் சிரமதைக் கொடுத்துவிட்டேன் - "திருவாசகமும் நாமும்" என்று. சிரமத்தைப் பின்னர் தான் புரிந்து கொண்டேன். எனினுந் தெரிந்ததைக் கூறவந்துள்ளேன். பிழைகள் இருப்பின் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கோரிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

உலக மொழிகள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு விதத்தில் சிறந்த கருத்து இணை கருவியாகக் கொள்ளப்பட்டுள்ளன. காதலுக்குப் பிரெஞ்சு மொழியையும், அரசியல் தந்திர மொழியாக ஆங்கிலத்தையும் குறிப்பிடுவார்கள். பக்திக்குப் பெயர் பெற்ற மொழி தமிழாகும். அப்பேர்ப்பட்ட மொழிக்குரிய இலக்கியத்தில் பக்திப் பரவசத்தை அதி உன்னதமாக ஏற்படுத்தும் படைப்பே திருவாசகம்.

"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற பெருமைக்குரியது திருவாசகம்.

"திரு" என்ற சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. இலக்ஷ்மி தேவியைத் திரு என்போம். செல்வத்தைத் திரு என்போம். அழகையுந் திரு என்போம். தெய்வத் தன்மையையுந் திரு என்போம். நல்வினையைக் கூட திரு என்று அழைப்போம். ஆனால் திருவாசகம் என்று கூறும் போது திரு என்ற சொல்லுக்கு அர்த்தம் இறைநிலை என்பதாகும். வாசகம் என்றால் மொழி அல்லது வார்த்தை என்று பொருள்படும். ஆகவே திருவாசகம் என்று கூறும் போது திரு+வாசகம் = திருவாசகம் ஆகின்றது. அதாவது இறைநிலை சக மொழி என்றாகின்றது. அதன் அர்த்தம் வீட்டை அல்லது இறைநிலையை அளிக்கும் அருள் மொழிகள் கொண்ட நூலே திருவாசகம் என்று கூறலாம்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்குமே மனித குலத்தின் விழுமிய இலட்ச்சியங்களாவன. அறவழி நின்று, பொருள் சேர்த்து, கல்வியில் இன்பம் துய்த்து, அவை தாண்டி வீடு அடைதலே தமிழர் தம் வாழ்க்கையின் குறிக்கோளாக பண்டைநாட்தொட்டு இருந்து வந்துள்ளது.

வீடு அடைவதற்குச் சில தகைமைகள் வேண்டும். அறம், பொருள், இன்பம், ஆகியவற்றை நாடி அடைய அகந்தை, ஆணவம் போன்ற குணாதிசயங்கள் ஒரு தடையாகா. ஆனால் வீடு அடையவேண்டும் என்ற அவாவந்துவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டால் அகந்தையும் ஆணவமும் முதலில் எங்களைவிட்டு நீங்கவேண்டும். ஆணவமலத்தால் பீடிக்கப்பட்ட ஆன்மா, மலநீக்கம் பெற்று விடிவு அடைந்தால்தான் வீடுபேற்றை அடையலாம். "நான் அற்ற நல்லோர்க் கெல்லாம் நான் இதோ" என்று எளியதாய்த் தோன்றுவான் இறைவன். வீட்டை நாடி பயணம் செய்வோரின் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள், மனோ நிலைகள் அதாவது மனஎழுச்சிகள், இறை வனின் லீலைகள், மனோவீழ்ச்சிகள், வெற் றிகள், தோல்விகள், மற்றும் யாவற்றையும் பிரதிபலிப்பனவாக திருவாசகம் அமைந்துள்ளது.

மாணிக்க வாசகப்பெருமான் பாடிய 51 திருவாசகப் பதிகங்களையும் பரிசீலித்தால் வீடு நோக்கிப் பிரயாணம் செய்யும் அடியவர்களின் உணர்ச்சி பூர்வமான அனுபவங்கள் அங்கு பொதிந்து கிடப்பதைப் பார்க்கலாம்.

அச்சோப்பதிகத்தில் இறைவன் அடிகளாரை மும்மலமாகிய ஆணவம், கன்மம், மாயை என்பவற்றில் இருந்து விடுவித்து, வெண்ணீறு அணிவித்து, தையலார் மையலிலே வீழ்ந்து விடாதபடி ஓங்காரத்தின் உட்பொருளை அவருக்கு உபதேசித்து, உய்யும் நெறியை அவருக்கு உணர்த்தி, அவரைச் சிவமாக்கித் தன் பாதார விந்தங்களைச் சேரும் வண்ணம் பணித்தமை கூறப்பட்டது.

திருச்சதகத்தினுள் இறைவன் பால் இடைவிடாத பேரன்பு பாராட்ட அடியளார் உறுதி கொண்டதும், நரகம் புகுந்தாலும் அதனை இகழாத மனநிலையை இறை அருளாலே அவர் பெற்றதும், வீடு பெறத்தாம் கபடமாக நாடகம் ஆடியதும், உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை தான் உருகாமை பற்றி வருந்துவதும், அதே நேரத்தில் அடிகளாருக்கு இறைவன் காட்டாதன எல்லாம் காட்டி கேளாதன எல்லாம் கேட்பித்து, மேலும் பிறவாமல் காத்தாண்டு கொண்டமையால் தான் யாருக்கும் குடி அல்லாத தன்மையை எய்தியதும், தன்னுடைய நெஞ்சத்தை அன்பின்மை நிமித்தம் கடிந்துகொள்வதும், தொடர்ந்து தனது உடல் ஊடான வாழ்க் கையில் தரித்து நிற்க அவர் தயங்கி யமையும், ஆடிப்பாடி அன்பு செய்து அம்பலத்தாடும் பெருமானின் கழலடி அடைய விரும்பியதையும்,அறிவுறுத்தி யமை நோக்கற்பாலது.

வீடு நோக்கிச் செல்லும் அடியார்களின் வாழ்க்கையில் அவர்கள் முகம் கொடுக்கும் பலவற்றை மணி வாசகரின் பாடல்களால் நாம் அறியக் கூடியதாய் இருக்கிறது. திருவாசகத்தின் சிறப்பு அதுதான். பக்தியால் பரமனை அடைய முடியுமென்றால் அந்த பக்தி மார்க்கத்தின் பயிற்சி நூலாகத் திருவாசகம் அமைந்துள்ளது.

உதாரணமாக, இறைவன் அந்தணனாகி ஆண்டு கொண்டருளியது, குதிரைச்சேவகனாய் இறைவன் மதுரை மாநகரில் எழுந்தருளியது, பாண்டியனுக்கு பரிமா விற்றது, நரிகளை குதிரைகள் ஆக்கியமை, அடியவர்களுக்காக அநாதரட்சகன் மண்சுமந்தருளியது, நந்தம் பாடி, உத்தரகோச மங்கை,திருப்பூவணம், பூவலம் திரு விடைமருதூர், திருக்கழுமலம், திருக்கழுக்குன்றம், தில்லை முதலிய இடங்களில் மணிவாசகப்பெருமானுக்கு காட்சி கொடுத்தமை யாவையும் கீர்த்தித் திரு அகவலுட் குறிக்கப்பட்டன. இவ் அகவல் மணிவாசகரின் வாழ்க்கையில் நிகழ்ந்த இறைவனின் லீலைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளையாடல்களையும் பிரதிபலிப்பனவாக அமைந்தன. இறைவனை நோக்கி நாங்கள் ஒரு அடி எடுத்து வைத்தால் அவன் பத்தடி எங்களை நோக்கி எடுத்து வைக்கின்றான் என்பதற்கு மணிவாசகரின் இந்த அனுபவங்கள் சாட்சி.

அச்சோப்பத்து, சென்னிப்பத்து, அற்புதப்பத்து, அதிசயப்பத்து என்ற பதிகங்களில் இறைவன் அத்தனை எளிதாகவந்து அருள் புரிந்ததை வியப்பதாய் பாடல்கள் அருளியுள்ளார் மாணிக்கவாசகர்.

இறைவனின் மற்றைய அடியாரோடு தானும் வீடடைய முடியாமை பற்றி வருந்தி இறைவன் தம்மை உடனே வீடு சேர்க்க வேண்டும் என்ற விருப்பத்துடன் பாடிய பதிகங்களே நீத்தல் விண்ணப்பம், ஆசைப்பத்து, அடைக்கலப்பத்து, பிரார்த்தனைப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, திருச்சதகம், செத்திலாப்பத்து முதலியனவாகும்.

திருப்பெருந்துறையில் தங்கியபோது சிவானுபோக முதிர்ச்சி காரணமாகப் பாடிய பதிகங்களே பண்டாயநான் மறை, திருவார்த்தை, திருவெண்பா, குழைத்தபத்து முதலியனவாகும்.

பிறருக்கு வீட்டு நெறியை அறிவுறுத்துவதற்காகப் பாடிய பதிகங்களே திருப்பள்ளி எழுச்சி, திருப்பாண்டிப் பதிகம், திருத்தசாங்கம், சிவபுராணம், திரவம் மானை முதலியன. தில்லைநோக்கிச் செல்லும் போது திருவாரூரில் அவர் பாடியதே திருப்புலம்பல். திருவிடை மருதூரில் பாடப்பட்டது திருவேசறவு. பிடித்தபத்து பாடியது திருக்கழுமலத்தில்.

திருவண்ணாமலையில் திருவெம்பாவையும், திருக்கழுக்குன்றத்தில் அத்தலப்பதிகமும் பாடிய பின்னர், அடிகளார் அவர்கள் தில்லையை அடைந்து கண்டபத்து, குலாப்பத்து முதலியவற்றில் தனது அனுபவங்களை இனிதுரைத்தார். பிறர்க்கு உண்மை அறிவு அளித்தற் பொருட்டு அகவல் மூன்றினையும் குயில்பத்து, கோத்தும்பி, திருப்பூவல்லி, திருத்தோணோக்கம், திருத்தெள்ளேணம், திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூஞ்சல், திருவுந்தியார், அன்னைப்பத்து முதலியனவற்றைப் பாடினார். வீடுபேற்று விருப்பால் கோயில் மூத்த திருப்பதிகம், எண்ணப்பதிகம்,ஆனந்தமாலை என்பவற்றைப்பாடினார். ஈற்றில் பாடியவை திருப்படை எழுச்சி, யாத்திரைப்பத்து, திருப்படையாட்சி ஆகிய பதிகங்களாவன.

இவற்றுள் திருச்சதகத்தில் எனக்கு பிடித்தமான ஒரு பாடலை மட்டும் இங்கு எடுத்துக் கொள்வோம்.

**யானே பொய் என்நெஞ்சும் பொய் என்அன்பும் பொய்**
**ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே**
**தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்**
**மானே அருளாய் அடியேன் வந்துறுமாறே.**

என்பது திருச்சதகத்தின் 90ஆவது பாடலாகும்.


இறைவா! உன்னை வந்தடைய எனக்கு அருள் தருவாயாக என்பதே இந்தப் பாடலின் விண்ணப்பம். வீடு நிலை அடைய வேண்டிக்கொள்ளும் எந்த பக்தனும் இதைத்தான் விண்ணப்பிப்பான். "இறைவா! என்னை உன்னுடன் சேர்த்துக்கொள்வாய்" என்றுதான் இறைஞ்சிக் கேட்பான். அந்த விதத்தில் மாணிக்கவாசகரின் விண்ணப்பம் ஒரு சாதாரண பக்தனின் விண்ணப்பம். ஆனால் அதை எவ்வாறு விண்ணப்பிக்கின்றார்? அதில் தான் திருவாசகத்தின் மகிமை, மாட்சி, பெருமை எல்லாம் அடங்கியிருக்கிறது.

[அடுத்த இதழில் தொடரும்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org